718

Reg. No. M. 1482.

ஸமரஸபோதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture, & Village improvement etc.

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor.

புத்தகம் 1. | ரௌத்ரிஸு ஆவணிமீ ௩௨ புதன்கிழமை 18th August 1920. தஞ்சாவூர். | பிரதி 10.

ஸமரஸபோதினி.

இஃதொரு தமிழ் வாரபத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ	5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ	7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	4—0—0
தனிப் பிரதி விலை	ரூ	0—2—0

விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ	20—0—0
4 insertions per month per column	Rs.	20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம்:— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

நாணயமும் நயமுமான

இடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, முந்தானை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், டீக்கலர், காங்கு கலர்களில் ஒம்ருல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜமக்காளங்கள்.

சர்கூட் ஜமக்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவரக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில் பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக்குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0. (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager,
Young India.
Ahmedabad.

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

கோரனஸ்ட்வ் நெ. 5. ரூ 14-0-0.

ஸன் கம்பெனி,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் 2-வது மகா நாடு.

அக்கிராசனாதிபதியவர்களின் பிரசங்கம்.

(சென்றவார போதினியின் 8-ம் பக்கம் தொடர்ச்சி.)

தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்களின் 2-வது மகா நாடு இம்மாதம் 8ந் தேதி பாபநாசத்தில் கூடியது. அவ்வமயம் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்காரின் பிரசங்கத்தில் ஒரு பாகத்தைச் சென்றவாரம்வெளியிட்டோம். அதில் மற்றொரு பாகத்தை இந்தவாரம் வெளியிட்டு நிறுத்திக்கொண்டு கடைசி பாகத்தை அடுத்தவாரம் வெளியிடுவோம்.:—

இவை தவிர வேறு பல கடமைகளும் இருக்கின்றன. நீங்கள் இந்த ஜில்லா கலெக்டரிடம் கொடுத்திருக்கும் மகஜரில் பின் வருமாறு கிராமாதிகாரிகளின் கடமைகளை விளக்கியிருப்பதாகத் தெரிகிறது.

I. (a) ரிவின்யூ இலாகா வசூல் (b) ஜமாபந்தி. (c) ஜனனமரணம். (d) அம்மை குத்தல் (e) பவுண்டு (f) ஸிவில் கிரிமினல் விஷயம். (g) குடிமராமத்: (h) வருமான வரி முதலியன.

II. காட்டு இலாகா :—ரிஸர்வ் காடுகளிலும் மற்ற ரிசர்வ் அல்லாத நாடுகளிலும் உள்ள பொருள்களைக் காப்பாற்றுதல் புறம்போக்குகளிலுள்ள விற்பனைக்கு வரக்கூடிய மரங்களின் குறிப்பெடுத்து அவற்றை விற்கவும் உதவி புரிதல். உத்தாவின்றி வெட்டப்பட்ட மரங்களைப்பற்றி அறிவித்து அது சம்பந்தமான விசாரணைகளில் கூட இருந்து உதவி செய்தல்.

III. மராமத்து இலாகா :—மராமத்து இலாகா உத்தியோகஸ்தர்களுக்குத் தேவையான பூமிகளுக்கு மதிப்புப்போட உதவி செய்தல்; பாய்ச்சல் வடிகால் முதலிய வேலைகளில் அந்த உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டி கணக்கு வழக்குகளில் உதவுதல். அந்த உத்தியோகஸ்தர்களுக்குட்பட்டு நடைபெறும் வேலைகளுக்கும் உடைப்புகள் அடைக்கவும் தேவையான சாமான்களும் கூலிகளும் கொடுத்ததவுதல்.

IV. போலீஸ் —போலீஸ் உத்தியோகஸ்தர்கள் குற்றங்களைக்கண்டு பிடிக்கும் வேலையில் உதவி செய்வதும், சோதனைகள் போடும்போது அவர்களுடன் கூடவிருப்பதும், மற்றும் அவர்கள் கிரமப்படி செய்யவேண்டிய கடமைகளில் உதவி செய்வதும், சந்தேகப்பட்ட மாணங்களைப் பற்றி விசாரணைகள் செய்வதும் அப்படிப்பட்ட கேஸ்களைப் போலீஸ் அதிகாரிகளுக்கும் மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் ரிப்போர்ட் செய்தலும்.

V. லோகல் பண்டு :—ஸ்தல விளை பொருள்களை விற்றல், லோகல் பண்டு ரஸ்தாக்களைச் சீர்திருத்துவதில் உதவி செய்தல், முதலிய வேலைங்களில் உத்தியோகஸ்தர்களுக்கு உதவி செய்தல் கிராம சுகாதாரங்களைக்கவனித்தல், வைசூரி குத்துகிறவர்களுக்கு உதவி செய்து குழந்தைகளுக்கு அம்மை குத்தும்படி செய்வித்தல். லோகல் பண்டு சத்திரங்களைப் பார்த்துக்கொள்ளல்.

VI. ஸிவில் நிர்வாகம் :—கேஸ்கள் விசாரணை செய்வது, ரிகார்டுகளை வருஷாந்தரப் பரிசோதனைக்காக அனுப்புவது, அமீனாக்கள் கடன்காரர்களது சொத்துக்களை ஜப்தி முதலியவைகளைச்செய்யும்போது கூடவிருத்தல் முதலியன.

VII. கால் நடை வைத்தியம் :—இந்த உத்தியோகஸ்தர்களுக்கும் கூடுமான வரையில் உதவி செய்தல், கால் நடைகளுக்குள் பரவும் தொற்று வியாதிகளை அறிவித்தல்.

VIII. தபால் இலாகா :—கிராமங்களில் மாதிரிக் கையெழுத்துக்கள் வாங்கி அனுப்புவது, மணியாடர்கள்கொடுபடும்போது சாட்சிபோடல்.

IX. தந்தி:—தந்திக் கம்பங்களுக்குக் கேடு நேராமல் கவனித்து அவைகளைக்குத் தீங்கிழைப்பவர்களைப்பற்றி ரிபோர்ட் அனுப்புதல்.

X. ரயில்வேக்கள் :—ரயில்வேக்களின் காவலும் உண்டு.

மேலே கண்ட உங்கள் குறிப்புகளை நான் அங்கீகரிப்பதுடன் ஒரு விஷயம் சேர்க்க விரும்புகிறேன். மரியாதைக்காக நீங்கள் அதைச் சேர்க்காமல் விட்டுவிட்டீர்கள். விதிப்படி கடமைப் படாவிட்டாலும், வெறுக்கத்தக்க வேலை உங்களுக்கு எல்லாவித உத்தியோகஸ்தராலும் கொடுக்கப்படுகிறது. கிராம முனிஸிப்கள் தம் கிராமங்களில் விஜயம் செய்யும் தாசில்தார்கள் கலெக்டர்களின் வண்டிகளுக்குப் பின்னால் காசாரிகள் போல் ஓடவேண்டியிருக்கிறது என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. வேகமாகச் செல்லக்கூடிய வண்டிகள் வழங்கும் இக்காலத்தில் மேற்கண்டவாறு சொல்வது மிகைப்படக் கூறுவதேயானாலும், மேலே குறிப்பிடப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கிராம உத்தியோகஸ்தர்களிடம் காண்பித்து வரும் மனோபாவம் நியாயமானதுமல்ல, அந்த உத்தியோகஸ்தர்களுக்கே கௌரவமானதுமல்ல என்று சொல்வதில் சந்தேகமிராது. மிகவும் கௌரவம் வாய்ந்த குணமுடையவரும் நிதானஸ்தருமான உத்தியோகஸ்தரும் அவருடைய குமாஸ்தாக்களும் மாத்திரமே கிராம உத்தியோகஸ்தர்களின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டு மரியாதை செய்கிறார்களேயன்றி மற்றப் பலரும் இக் காலத்தில் கூட கிராம நம்பரைக் கொண்டே தான் கூப்பிடுகிறார்கள் என்பது வாஸ்தவமென்றே நம்புகிறேன். கீழேயுள்ள ரிவின்யூ பியூன்கள் முதல் உயர்ந்த ஜில்லா அதிகாரிகள் வரையில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரில் எல்லா வகுப்பினரும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் தொல்லைகள் உங்களுக்கும் உங்களிடம் அனுதாபம் செலுத்துகின்றவர்களுக்கும் நன்றாகத் தெரிந்தவைகளே யாகும். உங்கள் பதவிமை மிகத் தாழ்வாக உங்களில் பலரும் நினைப்பதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று உங்களுக்கு சரியான காரணமின்றியே அபராதம் விதிக்கும் அதிகாரம் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுபட்டிருப்பதே யாகும். நீங்கள் வார்சுபாத்தியத்தினால் உத்தியோகம் வகித்த போதிலும் சரி, நேரே நியமிக்கப்பட்டிருந்த போதிலும் சரி, உத்தியோகஸ்தர்கள் என்றோ உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்கள் என்றோ கவர்ன்மெண்டினால் சில காரணங்களை உத்தேசித்து நீங்கள் நடத்தப்பட்டாலும் சரி, உங்களது சம்பளம் சம்பளமாகவோ அல்லது அலவன்ஸாகவோ முழு வேலைக்கென்றோ அல்லது சாதாரண வேலைக்கென்றோ கொடுக்கப்பட்டாலும் சரியே; எவ்வித நிலையில் நின்றபோதிலும் நீங்கள் தாசில்தார்களாலும் டிப்டி தாசில்தார்களாலும் அபராதம் விதிக்கப்படலாம். இது மாத்திரமல்ல, புதிதாக வந்திருக்கும் செட்டில்மெண்டு உத்தியோகஸ்தரும் மற்றுமுள்ள அந்த இலாகா சில்லரை வேலைக்காரரும் சிபார்சு செய்த மாத்திரத்தில் சிட்சிக்கப்படலாம். அம்மை குத்துகிறவர் முதல் கிராமத்திற்குள் வந்து செல்லும் ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் நீங்கள் செய்த அல்லது செய்யத் தவறிய காரியங்களில் அதிருப்தியடைந்தாலும் உங்களைக் காரணம் கேட்கின்றார்கள்; அவற்றிற்காக சிறு கண்டனங்களும் உங்களுக்குக் கிடைக்கின்றன. கவர்ன்மெண்டாரிடம் சம்பளத்திற்காகவே வேலை செய்துவரும் சிப்பந்திகளைக் காட்டிலும் உங்கள் விஷயத்தில் ராஜாவிதிகள் அதிகக் கடுமையுடையனவாக இருக்கின்றன. வேறெந்த தேசத்திலும் நடக்க முடியாத அவ்வளவு விபரீதமாக ஆபீஸ்களுக்கும் உத்தியோகஸ்தர்கள் முகாம் இறங்கியிருக்கும் இடங்களுக்கும் நீங்கள் வந்து காத்திருக்குமாறு உத்தாவிட்டு ரிவின்யூ சம்மன்களை துர்விநியோகம் செய்கிறார்கள்.

இப்படியெல்லாம் நீங்கள் சுய மதிப்பையும் விட்டு உழைக்க வேண்டுமென்கிற கவர்ன்மெண்டார் உங்களுக்கு என்ன பிரதிப்பிரயோஜனம் ஏற்படுத்தி இருக்கிறார்கள்? ஆதியில் நான் கூறியபடி கிராம முனிஸீப்கள் சம்பளமின்றி வேலை செய்வார்களென்று கவர்ன்மெண்டார் எதிர்பார்த்தார்கள். பிறகு 1868 ல் கிராம சிப்பந்திகளின் நிலைமை முழுமையும் மாற்றப்பட்டது. அப்போது பின் வரும் சம்பள விகிதம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

வகுப்பு.	மணியம்.	கர்ணம்.	பியூன்.
I	7	9	3
II	6	8	3
III	5	7	3
IV	4	6	3

அந்தக் காலத்தில் நெல் கலம் ஒன்றுக்கு 8 அணாவாக விற்றதை ஆதாரமாக வைத்துக்கொண்டு சம்பளத்தை நிர்ணயித்தார்கள். இப்போது நெல் அதைப்போல் ஆறு மடங்கு விலை விற்கின்றது. அதனால் இப்போது கொடுக்கப்படும் சில ரூபாய்களுக்கு எவ்வளவு குறைவான மதிப்பு ஏற்பட்டிருக்கிறதெனத் தெரிகின்றது. 1893 ல் இந்த ஜில்லா மறு செட்டில்மெண்டு செய்த காலத்தில் கவர்ன்மெண்டார் தஞ்சை ஜில்லாவிலிருந்து கிடைக்கும் வருமானத்தை நூற்றுக்கு 40 வீதம் அதிகரிக்க ஏற்பாடு செய்தனர். இதற்குக் காரணம் கூறும்போது கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய ரிவின்யூவின் பணமதிப்பு

(11ம் பக்கம் பார்க்க.)

ஸமரஸ போதினி

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்திரி ஞு ஆவணிமீ ௨ புதன்கிழமை

18th AUGUST 1920

சமூக ஊழியம்.

இந்திய சமூகமானது பல ஜாதியினர்களையும் பல மதஸ்தர்களையும் அடங்கியுள்ள ஒரு பெரிய கூட்டமெனலாம். இந்தியாவில் ஹிந்துக்கள், முகமதியர்கள், பார்சிகள் கிறிஸ்தவர்கள் முதலிய வகுப்பினர்கள் வசித்து வருகிறார்கள். அவரவர்கள் தத்தம் மதாசாரங்களையும் மதக்கொள்கைகளையும் அனுசரித்துக்கொண்டு வருகிறார்கள். பல மதஸ்தினர்கள் குடிகொண்டிருக்கும் நமது தேசத்தில, சில சந்தர்ப்பங்களில் ஒரு மதஸ்தினர்களுக்கும் மற்றொரு மதஸ்தினர்களுக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்பட்ட போதிலும், இவர்கள் விசேஷமாய் அன்போடு ஒத்து வாழ்ந்து வருகிறார்களென்றே கூறவேண்டும்.

சமூக ஊழியத்தைப்பற்றி எழுத ஆரம்பிக்குமுன் நமது தேசத்தின் தற்கால நிலையைச்சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். ஆராய்ந்து பார்க்குங்கால் தேசத்தில் வறுமை அதிகரித்துக்கொண்டு வருவதும், பிணிகள், பெரும் நோய்கள் குடிகொண்டிருப்பதும், தேசத்தில் அதிலும் விசேஷமாக கிராமங்களில் சுகாதாரக் குறைவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் தொழில்கள் விருத்தி அடைவதற்கு இடமில்லாமலிருப்பதால், ஏழைகள் பிழைப்பதற்குவழிகளின்றிருப்பதும், விவசாயத் தொழில் மிகவும் கேவலமான ஸ்திதிக்கு வந்துவிட்டதும் பொறுக்கமுடியாதனவாயிருக்கின்றன. ஏரு முதலியவைகளைப் போட்டுப் பூமியைச் செழிப்பாகச் செய்வதற்கு வேண்டிய வசதிகளும், பொருளும் வியவசாயிகளுக்கு இல்லாமலிருப்பதனால் அவர்கள் கடன்பட்டு மாளுகிறார்கள். ஜனங்கள் படிப்பில்லாததால் அக்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். ஜனங்களுக்குள் விவகாரங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. கோர்ட்டுகளுக்குப் போய் ஏராளமான பணத்தைச் செலவு செய்து தங்களுடைய வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் கெட்ட வழக்கம் நம்மவர்களுள் சகஜமாகிவிட்டது. மேல்நாட்டாரின்நடை, உடை பாவனைகளைப் பின்பற்றியதின் பயனாக ஜனங்களுள் சகோதர பாவம் குறைந்து, சுயநலப்பிரியம் அதிகரித்து அவரவர்கள் தங்கள் தங்கள் சுய காரியத்தையே கவனிக்குமாறு காலம் ஏற்பட்டுவிட்டது. பண்டைக்காலம்போல் பரோபகார சிந்தை தானம் தர்மம் விசேஷமாகச் செய்யும் நல்ல குணங்களெல்லாம் இப்போது ஜனங்களிடம் மறைந்துபோய் இருக்கின்றன. கடவுள் பக்தியும் குன்றிப்போயிருக்கிறது. மதாபிமானமும் குறைந்து வருகின்றது.

இந்நிலையில் தெய்வானுகூலமாக நம் மத்தியில் சமூக ஊழியம் செய்யத் தேசாபிமானமுள்ளவர்களும், தெய்வ பக்தியுள்ளவர்களும், பரோபகாரிகளும் இல்லாமற் போகவில்லை ஆனால் அவர்களுக்கு அந்தக் குணங்கள் மாத்திரம் இருந்தால் போதா. தேசத்தின் முற்கால நிலைமையையும் தற்கால ஸ்திதியையும் அறிந்தவர்களாக இருக்கவேண்டும். அப்போது தான் சமூகத்திற்கு ஊழியம் சரியான வழியில் செய்யலாம். அவர்களிடம் தன்னல மறுப்பு, தியாக புத்தி முதலிய நற்குணங்களிருந்தால் தான் அவர்களுடைய காரியங்கள் சோபிக்கும். தேச முன்னேற்றத்திற்காக நாம் பலவிதமான ஊழியங்களைச் செய்யலாம். பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி ஏழைப்பிள்ளைகளுக்குத் தேசீய கல்வி கற்பிக்கலாம். தாய் தகப்பனை இழந்த திக்கற்ற குழந்தைகளை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஏதாகிலும் ஒரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுக்கலாம். அதற்காக முயற்சிசெய்து பணம் வசூலித்து ஆங்காங்கு கைத்தொழில் சாலைகளை ஏற்படுத்தலாம். தொழிலாளர்களுடைய பரிதாப நிலையை உள்ளபடி உணர்ந்து அவர்களுக்கு இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி எழுதப்படிக்கச் சொல்லிக் கொடுக்கலாம். இத்துடன் அவர்களுக்குச் சுகாதார முறைகளைப் போதிக்கலாம். சுகாதாரத் தத்துவத்தை அறிந்தவர்கள் பல கிராமங்களுக்குச் சென்று கிராமவாசிகளுக்குச் சுகாதாரம் இன்னதென்றும் அதை அனுஷ்டிப்பதனால் உண்டாகும் நன்மை இன்னதென்றும் வற்புறுத்திச் சொல்லலாம். கிராமந்தோறும் சென்று வீட்டுக்கு வீடு நமது நாட்டின் பருத்தியைக்கொண்டு நூல் நூற்கும் ராட்டினத்தினால் நூல் நூற்று அந்நூல்களைக்கொண்டு கைத்தறிகளினால் துணி நெய்யச்சொல்லலாம். தற்சமயம் அம்மாதிரி செய்வது தான் உசிதமென்று மகாத்மா காந்தி அடிகள் நாடெங்கணும் உபதேசித்துப் பறையடித்து வருகிறார்கள். காந்தியடிகளது உபதேசம் கிராமம் கிராமமாகப் பரவ தேசாபிமானத்தோடு ஊழியம் செய்ய நண்பர்கள் நூற்றுக்கணக்காக முன்வரல் வேண்டும். அதோடுகூட கிராமங்களிலுள்ள மகாஜனங்கள் ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொள்ளக்கூடாதென்றும் அவர்களுள் ஏற்படும் விவகாரங்களையும் வழக்குகளையும் கிராமப் பஞ்சாயத்து மூலமாகவே தீர்த்துக்கொள்வது அவர்களின் க்ஷேமத்திற்குச் சாதனமாகுமென்றும் சமூக ஊழியம் செய்பவர்கள் விளக்கிக்காட்டவேண்டும். ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் என்றைக்கும் நிற்கக்கூடிய சிநேக பாவத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். நம்மைக்காட்டிலும் தாழ்ந்தவர்களைத் தாழ்ந்தவர்களாகப் பாவித்து அவர்களை நிந்திக்காமல் அன்னாரைக் கைதூக்கிவிடவேண்டும். சமூக ஊழியம் செய்ய முன்வருபவர்கள் இதைக் கண்டிப்பாய் உணரவேண்டும். தேசத்தினின்றும் பிணி வறுமை, பஞ்சம் முதலியவைகளை அடியோடொழிக்கவேண்டிய வழிகள் எவையென்பதை ஆராய்ந்து பார்த்து அவைகளை ஜனங்களுக்கு உள்ளபடி அறிவிக்கவேண்டும்.

ஆகையால் நண்பர்களே! தேசாபிமானிகளே! நமது தாய்நாடு முன்னேற்றம் அடையவேண்டுமென்கிற எண்ணத்தை மனதில் உறுதியாகக்கொள்ளுங்கள். அவ்வுறுதியோடு ஊழியம்செய்ய முன்வாருங்கள். சமூகத்திற்குத் தியாகபுத்தியுடன் ஊழியம் செய்தால் அது பகவானுக்குச்செய்யும் கைங்கரியமல்லவா? அப்படிச் செய்வதைத்தான் கர்மயோகமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். பகவத்கீதையும் அவ்வாறே கோஷிக்கிறது. திலகர் பெருமான் சமூக ஊழியத்தையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருந்தார். இவ்விதம் ஊழியம்செய்ய ஊக்கமும் உத்ஸாகமுமுள்ள படித்த வாலிபர்கள் தேவை. ஏற்கனவே பல வாலிபச் சாரணர்கள் சமூகத்திற்கு அநேகவிதமான ஊழியங்கள்செய்து வருகிறார்கள். அவர்களோடு நாமும் சேர்ந்து சமூகத்தின் முன்னேற்றத்தைக் கவனித்து ஊழியம் செய்வோமாக.

இடை நிவஸ விளக்கு.

நல்ல காரியம் செய்தனர்

லார்ட் வில்லிங்டன் கவர்ன்மெண்டார் கொலை பாதகனாகிய டயரிடத்தில் அனுதாபம் காட்டாதது மெச்சத் தக்கது. இந்தியாவில் அமைதியின்மையையும் அதிருப்தியையும் உண்டாக்கும் தொழிலையே கொண்டிருக்கும் ஆங்கிலோ இந்தியர்கள் பகிரங்கமாக டயர் நிதிக்குப் பணம் உதவிசெய்து வருவதை நேயர்கள் அறிவார்கள். இந்த அயோக்கியச் செயலைக் கண்டு இந்தியர்களுடைய மனம் புழுங்கித்தவித்து நிற்கும் தருவாயில், சென்னைக் கவர்ன்மெண்டார் தைரியமாக முன்வந்து தம் கீழுள்ள உத்தியோகஸ்தர்கள் டயர் நிதிக்குப் பண உதவி செய்யக்கூடாதென்று உத்தரவு செய்திருப்பதாகக் கேள்விப்பட்டுச் சந்தோஷப்படுகிறோம். ஸிவிலியன்களுடைய பயமுறுத்தலுக்கு லார்ட் வில்லிங்டன் பயப்படாமலிருந்தாலும், அவர்களில் பலர் கவர்ன்மெண்ட் உத்தரவிற்குக் கட்டுப்பட்டிருப்பார்களோ வென்பது சந்தேகம். இதை நாம்

எழுதி முடித்த பிறகு இந்தியா கவர்ன்மெண்டாரே இவ்வாறு உத்தரவு செய்து அதை எல்லா மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு அனுப்பியிருப்பதாக டிரிப்யூன் பத்திரிகை கூறுகிறது.

ஓர் இந்திய கவர்னர்.

லார்ட் ஸின்ஹா பீகார் ஒரிஸா மாகாணத்திற்குக் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறாரென்ற செய்தியைக்கேட்டு நமக்கு ஒரு புறத்தில் சந்தோஷமும் மற்றொரு புறத்தில் ஆச்சரியமும் உண்டாகின்றன. இந்தியர் அப்பெரிய பதவிக்கு நியமிக்கப்பட்டது பற்றி ஸந்தோஷம். பிற்போக்கான குணம்வாய்ந்துள்ளவரும், இந்தியர்களின் கோரிக்கைகளை ஓர் இந்தியன் அறிவதுபோல் உள்ளபடி அறியாதவருமான லார்ட்ஸின்ஹா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டது விசனிக்கக்கூடியதென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம். இந்தியர்களும் இவ்வாறே அபிப்பிராயப்படுவார்கள். ஊன்றிப்பார்க்கும்போது, இதுபோன்ற நியமனங்களினால் இந்தியாவின் பொருளாதார நிலை சீர்பெற்றுவிடாது. பசியால் வருந்தும் லட்சக்கணக்கான ஏழைகள் இன்புற்றுவாழ மார்க்கமில்லையென்பதைப்பொதுஜனங்களும் கவர்ன்மெண்டாரும் உணரவேண்டும். இந்தியர்கள் பிரிட்டிஷாரைப் போல் எல்லாத் துறைகளிலும் சமஉரிமைகள்பெற்று முன்னேற்றம் அடைவதற்குரிய முயற்சிகளில் தாராளமாகச் சேர்க்கப்பட்டாலன்றிக் கேவலம் சில்லரை சீர்திருத்தங்களால் அவர்கள் சுகித்திருக்க வழியில்லையென்பதை நாம் கவர்ன்மெண்டாருக்கு அறிவுறுத்துகிறோம். லார்ட் ஸின்ஹா எவ்விதம் ஆட்சி முறையில் பேரெடுப்பரென்பது இப்போது ஒருவராலும் சொல்லமுடியாது. ஆனால், லார்ட் ஸின்ஹா தமது பழைய பிற்போக்கான கொள்கையை அடியோடு மாற்றிக்கொண்டு காலத்திற்கேற்றபடி ஜனநாயக உணர்ச்சியோடு ஆட்சிபுரிந்தாலொழிய அவரது ஆட்சியினால் பிரமாதமான நன்மைஉண்டாகுமென்று எதிர்பார்ப்பது பேதமையாகும்.

இந்தியா மந்திரியின் அவசர புத்தி.

ஏதோ போதாத காலத்தினால், இந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மான்டேகு தட்டுத்தடுமாறிப்பேசி இந்தியர்களுக்கும் அதிருப்தியைக்கொடுத்துவருகிறார். இதற்குக்காரணம் இவரது அவசர புத்தியேயாகுமென்று தெரிகிறது. பஞ்சாபில் பெருவதை நடந்த காலத்தில் பாஞ்சால ஸ்திரீகள் மானபங்கம் செய்யப்பட்டார்களென்றும், இராணுவத்தினரால் அடிக்கப்பட்டுவாயில் வந்தவாறு திட்டப்பட்டார்களென்றும் ஸ்ரீமதி சரோஜினிதேவியவர்கள் லண்டனில் கூடிய ஒரு கூட்டத்தில் பேசினார். இவ்வாறு உண்மை சொல்லப்பட்டதை ஆர அமரப்பார்க்காமல் மிஸ்டர் மான்டேகு "நீர் எந்த ஆதாரத்தைக்கொண்டு இவ்வாறு பேசினீர். நீர் பேசியது உண்மையல்ல; மூன்று தினங்களில் நீர் கூறியவைகளை வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டும்; அல்லது தக்கசமாதானம்கூறவேண்டும்" என்று தமது காரியதரிசியைக்கொண்டு ஒரு கண்டிப்பான கடிதம் ஸ்ரீமதி சரோஜினியம்மாளுக்கு எழுதினார். இந்தக் கடிதம் எழுதிய மறுதினமே மற்றொரு கடிதம் எழுதி அதில் "நீர் கூறியபடி இராணுவ அதிகாரிகள் செய்யவில்லை. யாரோ போலீஸார்கள் செய்ததாகக் காங்கிரஸ் ரிபோர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது எனினும் நீர் சமாதானம் கூறவேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். இக்கடிதங்களைப் பார்வையிட்ட நமது பாரத புத்திரி சும்மாவிருக்கவில்லை. மிஸ்டர் மாண்டேகு திடுக்கிடும்படி காங்கரஸ் கமிட்டி ரிப்போர்ட்டினின்று பாஸ் ஓர்த்ஸ்மித் என்ற பாதகன் முன்னிலையில் நமது பஞ்சாப் சகோதரிகள் மானபங்கம் செய்யப்பட்டதையும், திட்டப்பட்டதையும் அத்தியாயம் அத்தியாயமாக எழுதியனுப்பினார்.

பாவம்!

மிஸ்டர் மாண்டேகு என்ன செய்வார்? பாவம்! அவசர புத்தியால் ஏற்பட்டதன்றோ? இராணுவ ஆட்சி காலத்தில் போலீஸாருக்கும் இராணுவத்தினர்களுக்கும் வெகு வித்தியாசங்களிருப்பதாகப் பாசாங்கு செய்கிறார்! இவ்விருவர்களுக்கும் என்ன வித்தியாசமோ? எரிகிற நெருப்பில் சிறிய நெருப்புக்கும் பெரிய நெருப்புக்கும் என்ன வித்தியாசமோ அந்த வித்தியாசம் தான் மிஸ்டர் மாண்டேகு கடிதத்தில் காணப்படுகிறது. அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்யும் இந்தியா மந்திரி இதுசாறும் அவசரப்பட்டே ஒவ்வொரு காரியத்தையும் முடிவுசெய்திருக்கிறாரென்று புலனாகிறது. இந்தியா மந்திரி தாம் ஏதோ இதுவிஷயமாக விசாரணை செய்வதாக அறிவித்திருக்கிறார். இவர் விசாரித்தாலென்ன? விசாரியாமலிருந்தாலென்ன? பெரிய குற்றவாளிகள் சரியாகத் தண்டிக்கப்படவில்லை. அவர்கள் இந்தியர்கள் வயிறு எரியும்போது, பாஞ்சால ஸ்திரீகளின் மனம் துடித்துக்கொண்டிருக்கும் காலை உல்லாசமாகப் பிரசங்கம் செய்வதும், தாங்கள்செய்த அடாத செயல்களைப் பற்றிப் புகழ்வதுமாயிருக்கிறார்கள். இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு யார்கண்ணைத்துடைக்க இந்த வேஷம் போடுகின்றனரோ? தெரியவில்லை.

ஒத்துழையாமை.

சாதக பாதக அபிப்பிராயங்கள்.

சாதகம்.

பர்புவிபின சந்திர பாலர்:—இப்போது தேசமிருக்கும் நிலையில் ஒத்துழையாமை யொன்றே சரியான மருந்தாகும். இஃதொன்றினால் மாத்திரம் தான் நாம் சுதந்திரம் பெறமுடியும். பிரிட்டிஷ் ஆட்சியை ஸ்தாபித்தவர்கள் இராணுவ பலத்தை நம்பினவர்கள். வங்காளத்தில் சுதேசியக் கிளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் இராணுவ பலம் காண்பிக்கப்பட்டது. இந்தியர்களுடைய ஆள் பலம் இந்தியர்கள் மீது செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. இனி அது முடியாத காரியம். பஞ்சாபியர்களும், பட்டாணியர்களும் விழித்துக் கொண்டுவிட்டார்கள். கடைசியாக ஆப்பிரிக்கர்களைக் கொண்டு வரலாம். அவர்களைப் பழக்குவதற்குப் பத்து வருஷங்கள் செல்லும். இதற்குள்ளாக நாம் சுதந்தரத்தைஒத்துழையாமையைக் கொண்டு எவ்வளவு கைப்பற்ற முடியுமோ அவ்வளவையும் கைப்பற்றிக்கொள்ளவேண்டும்.

* *

அமிர்த பஜார் பத்திரிகை:—இந்தியாவில் தோன்றிய இயக்கங்களில் ஒன்றாவது ஒத்துழையாமை இயக்கத்தைப்போல் ஆங்கிலோ இந்தியர்களுடைய மனதைக் கலக்கிவிடவில்லை. ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகள் இந்த இயக்கத்தைக் கண்டித்துக் கேவலமாக நினைக்கும்பொழுது என் அவைகள் திரும்பத் திரும்ப ஒத்துழையாமையைப்பற்றி எழுதுகின்றனவோ? ஆச்சரியமாயிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கம் வலுத்துவிட்டால் தங்கள் பாடுதிண்டாட்டமென்றுஅவர்களுக்குத் தெரியும். வண்ணான், அம்பட்டன், பரிசாரகன், வேலைக்காரன், மாமிசம் விற்பவர்கள் முதலிய இவர்களெல்லோரும் ஒத்துழையாமை விரதத்தைக் கைப்பற்றினால், ஆங்கிலோ இந்தியர்கள் ஊருக்குப்போக வேண்டியவரும் கவர்ன்மெண்டாருக்குக் கஷ்டமுண்டாகும். ஒத்துழையாமை இயக்கத்தினால் கலகமுண்டாகுமென்று சிலர் வேண்டுமென்று சொல்லுகின்றனர். இப்படிக் கூறுவது உண்மையல்ல. இது நியாயமான இயக்கமாகும். நம்மில் சிலர் இது நியாயமல்லவென்று கூறி அதிகார வர்க்கத்தினர்களோடு சேர்ந்துகொண்டு அடக்குமுறைகளைக் கையாள உதவி செய்தால் அச்செய்கை முட்டாள்தனமானதென்றே கூறவேண்டும்.

* *

திலகர்:--சிலர் திலகர் ஒத்துழையாமைக்கு விரோதமென்று கூறிவருகின்றனர். உண்மையில் அப்படிக்கூறுவது நியாயமல்ல. திலகர் தேசத்தின் தற்கால நிலைக்கு ஒத்துழையாமை யொன்றே சரியானதென்று கூறியிருக்கிறாரென்பதை நாமறிவோம். திலகர் முஸ்லிம்கள் ஒத்துழையாமையை அனுஷ்டித்தால் தாமும் தம் கட்சியினர்களும் முஸ்லீம்களைப் பின் பற்றத் தயாராயிருப்பதாகமௌலானாஷவுகத்தலிக்குஉறுதி கூறியிருக்கிறார். முஸல்மான்கள் சட்டசபைகளைப் பகிஷ்காரம் செய்தால் தாமும் தம்முடைய கட்சியினரும் அவ்வாறே செய்வதாகக் கூறியுள்ளார். இங்ஙனமிருக்க, திலகர் ஒத்துழையாமைக்கு விரோதமான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தாரென்று சொல்வது தவறாகும் என மகாத்மா காந்தியின் "யங் இந்தியா" பத்திரிகை எழுதுகிறது.

* *

மௌலானா சௌக்கத்தலி, ஜனாப்கள் கிச்சிலு யாகுப் ஹாஸன், திரிச்சி சையத் முர்ட்டாஸா சாகிப், சென்னை குதுஸ்பாட்சா சாகிப் லக்னோ அப்துல் பாரி முதலிய முஸ்லிம் தலைவர்கள் ஒத்துழையாமை அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று கூறுகிறார்கள். இந்துக்களில் சில தலைவர்களும் ஒற்றுழையாமை வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

பாதகம்.

ஸ்ரீமான். எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்:—சமீபத்தில் கூடிய திருநெல்வேலி மகா நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் நாலு படிகளில் கடைசி இரண்டு படிகள் சட்ட விரோதமென்றும் முதல் இரண்டு படிகள் சட்டப்படி நியாயமென்றும் கூறினார். ஆனால் இப்போது கவர்ன்மெண்டாருடன் ஒத்துழையாமலிருப்பதே நியாய விரோதமென்றும், அதன் நாலு படிகளும் சட்டப்படி விரோதமென்றும் கூறுகிறார். இவ்வாறு இவர்

முன்னுக்குப் பின் மாறுபாடாகச் சொல்லுவது என் கருத்தென்னவென்றும், என் தெளிவாய் தாம் ஒத்துழையாமை இயக்கத்திற்கு விரோதமானவரென்று சொல்லக்கூடாதென்றும் ஜன்மபூமி பத்திரிகை கேட்கிறது.

*   *

ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளும் மிதவாதிகளும், மிதவாதப் பத்திரிகைகளும், தேசீயக் கட்சியினர்களில் சில தலைவர்களும் ஒத்துழையாமை கூடாதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், சிற்சில காங்கரஸ் கமிட்டியார்கள் இந்தியாவிலுள்ள எல்லாக் காங்கரஸ் கமிட்டியார்களும் விசேஷ காங்கரஸின் தீர்ப்பை எதிர்பார்த்து நிற்கிறார்கள். தேசீயக்கட்சியினர்களில் பெரும்பாலோரும் முஸ்லீம்களில் பெரும்பாலோரும் செப்டம்பர் 4, 5, 6, 7-ந் தேதிகளில் கூடும் விசேஷ காங்கரஸ் எல்லா இந்திய முஸ்லீம் லீக் ஆகிய இச்சபைகளின் அபிப்பிராயங்களை எதிர்பார்த்து நிற்கிறார்கள். இவ்வியக்கத்திற்கு மகாத்மா காந்தியடிகள் தலைமை வகித்துத் தேசமெங்கும் பிரசங்க யாத்திரை செய்து வருகிறார்கள்.

*   *

மெஸர்ஸ் இந்துப்பத்திரிகாசிரியர் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், சுதேசமித்திரன் பத்திராதிபர் எ. ரங்கசாமி ஐயங்கார், சத்யமூர்த்தி, வி. ஒ. சிதம்பரம்பிள்ளை முதலியவர்கள் சட்டசபைகளைப் பகிஷ்காரம் செய்யக்கூடாதென்று தீர்மானித்துவிட்டார்கள்.

கிராம உத்தியோகஸ்தர்கள் செய்தி.

இம்மாதம் 8-ந் தேதி பாபநாசத்தில் கூடிய இரண்டாவது கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளை நண்பர்கள் கவனிக்க :-

(1) சம்பளக் கமிட்டியாருடைய சிபார்சை அனுசரித்துக் கவர்ன்மெண்டார் கிராம முனிசீப்புகளுடைய சம்பளத்தை உயர்த்தாமல் அலட்சியமாயிருந்து விட்டதைப்பற்றி இந்த மகாநாடு வருத்தமடைகிறது.

(2) பி(எ.) கிராம முனிசீப்புகளின் சம்பளத்தையும் கர்ணங்களுடைய சம்பளத்தைப் போல ஒரே மாதிரியாக நிர்ணயம் செய்யவேண்டுமென்றும், கிராம சிப்பந்திகளின் சம்பளத்தைவிட கிராம முன்சீப்புகளின் சம்பளம் குறைவாக இருப்பது அகௌரவமாயிருக்கிறதென்றும்,

(பி) கிராம முன்சீப்புகளை அகௌரவமாக நடத்துவதை அறவே ஒழித்து அவர்களை மரியாதையாக நடத்தி வரவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

3(எ) இப்போதுள்ள குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு கிராம முன்சீப்புகள் வேலை பார்க்கச் சம்மதமில்லாதவர்களாக இருக்கிறார்களென்று மகாநாடு தீர்மானிக்கிறது.

(பி) கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் சட்ட சபைகளுக்கும் அபேக்ஷகர்களாக நிற்கவும் பூரண ஓட்டுரிமைகள் பெறவும் வழி பண்ணவேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது

(஡ி) கிராம உத்தியோகஸ்தர்களைக் கிராமங்களைவிட்டு வெளியே அழைக்கும் காலங்களுக்குத் தினமானம் அவர்களுக்கு ரூபா 1-2-0 படி கொடுக்கவேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(டி) இன்னும் கிராம உத்தியோகஸ்தர்களையும் ரயத்வாரி கிராம உத்தியோகஸ்தர்களைப் போலவே பாவித்து அவர்களுக்கும் அதே சம்பளம் கொடுக்க வற்புறுத்துகிறது.

4(எ) பத்தாயிரம்கர்ணங்களின் சம்பளம் 15 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறதென்றும், உடனே அவர்களுடைய சம்பளத்தை 30 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்றும் இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(பி) கிராம உத்தியோகஸ்தர்கள் வட்டத்தில் குடியிருக்க முடியாத இடங்களில் வட்டத்தில் தான் அவர்கள் குடியிருக்கவேண்டுமென்று நிர்பந்திக்காமல் வட்டத்திற்கு 3 மைலுக்குள் குடியிருக்க அனுமதிக்க் வேண்டுமென்றும் இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. அவ்வித உத்தரவு முடிவாகச் செய்யப்படும் வரையில் இப்போது வட்டத்திற்கு வெளியே குடியிருப்பவர்கள் அங்கேயே வசிக்க அனுமதிக்க வேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

(ஸி) கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை உயர்த்தும் விஷயமாய் விசாரணை நடத்தி சிபார்சுகளைச் செய்ய ஸ்பெஷல் டியூடியில் நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் எ ஆர் நாப் கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுடைய பிரதிநிதிகளை நேரில் கண்டு பேசி பிறகே சிபார்சுகளைச் செய்யவேண்டுமென்று இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(டி) கிராம உத்தியோகஸ்தர்கள் தாலூக்காவிற்கு ஜமாபந்தி காலத்திலும் மற்ற அலுவல்கள் விஷயமாகவும் வரும்போது அவர்கள் சவுகரியமாய் தங்கியிருந்து தங்களுடைய ரிகார்டுகளை வைத்திருக்கச்சவுகரியமான இடவசதி செய்து தரவேண்டுமென்று இந்த மகாநாடு வற்புறுத்துகிறது.

ஓய்வில்லாத யாத்திரை.

மகாத்மாவுக்கும் சௌக்கத்தலிக்கும் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

இம்மாதம் 12ந் தேதி காலை 9½-மணிக்குப் பம்பாய் மெயிலில் மகாத்மா காந்தியடிகளும், மௌலானா சௌக்கத்தலியும் சென்னை நகரம்வந்து சேர்ந்தார்கள். இவர்கள் ராஜவைபவத்திற்குச் சிறப்பாகவரவேற்கப்பட்டார்கள். ஒருசக்கிரவர்த்திக்குக்கூட இவர்களுக்குவழங்கப்பட்ட வரவேற்பைஜனங்கள் மனமார்ந்து கொடுக்கமாட்டார்களென்று நாம் திடமாய்க்கூறலாம். சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் இவர்களை ரெயில்வே ஸ்டேஷனில் வரவேற்க்கக்கூடியிருந்தார்களென்று சென்னையினின்றும் வந்த பத்திரிகைகள் கூறுகின்றன. இவர்கள் வியாழக்கிழமை மாலை கடற்கரையில் ஒரு சிறந்த உபந்நியாசம் செய்தார்கள். அதில் ஒத்துழையாமையொன்றுதான் இந்தியர்கள் தங்களுடைய கௌரவத்தையும் கோரிக்கையையும் அடைவதற்குஏற்றசாதனமென்றுகுறிப்பிட்டார். 13ந் தேதி காலை எட்டு மணிக்குக் கிலாபத் ஆபீஸ் தலைவர்களுடன் அந்தரங்கமாய் ஒரு கான்பரன்ஸ் நடத்தினர். 13ந் தேதி இரவு ஆம்பூரில் கூடிய கிலாபத் கான்பரன்ஸுக்கு விஜயம் செய்தார்கள். அங்கிருந்து வேலூர் முதலியவிடங்களில் பிரசங்கம் செய்துவிட்டு 14ந் தேதி காலை சென்னைவந்து சேர்ந்தார்கள். தொழிலாளர்கள் மத்தியில் ஓர் அரிய பிரசங்கம் செய்து அதில் தொழிலாளர்கள் முன்னேற்றமடைவதற்குரிய யோசனைகளையும் புத்திமதிகளையும் குறிப்பிட்டார். களைப்பின்றியும் ஓய்வின்றியும் 15ந் தேதி இரவு புறப்பட்டு 16ந் தேதி காலை கும்பகோணம் வந்து அங்கு ஒரு பெரிய கூட்டத்திற்குப் பிரசங்கம் செய்தபிறகு நாகூருக்குத் தஞ்சை வழியாகப் பிரயாணம் செய்தார். இந்து முஸ்லிம்களடங்கிய ஒரு பிர்ம்மாண்டமானகூட்டத்திற்கு உபந்நியாசம்செய்து ஒத்துழையாமையைப் பற்றி வற்புறுத்தினர். பின்னர் 17ந் தேதி காலை மகாத்மாவும் மௌலானாவும் தஞ்சை விஜயம் செய்தார்கள்.

எதிர்பாராத கூட்டம்.

இதுவரையில் எதிர்பாராத ஒரு பெரிய பிர்ம்மாண்டமான கூட்டம் கிருஷ்ணலீலா நாடகக்கொட்டகையில் கூடியது. ஜனங்கள் காலை எட்டுமணி முதல்கொண்டே கொட்டகையில் கூடிவிட்டார்கள். அங்குக் கூடியிருந்தவர்களின் மொத்தத் தொகை இருபதினாயிரம் இருக்கலாம். மகாத்மா காந்தியும் மௌலானா சௌக்கத்தலியும் சரியாக 11 மணிக்கு நாடகக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தார்கள். கூட்டம் தாங்கமுடியாமலிருந்ததால் சில பெரியோர்களுடைய யோசனையின் பேரில் மௌலானா சௌக்கத்தலி ரோடின் மேற்புறத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டிப் பிரசங்கம்செய்தார். இரண்டு பிரசங்க மேடைகளிலும் ஜனங்கள் ஏராளமாய் நின்று பெரியோர்கள் சொல்லியதைக் காதுகொடுத்து கேட்டார்கள். நம் தேசம் தற்காலமிருக்கும் நிலையில் ஒத்துழையாமை ஒன்றே சரியான மருந்தென்றும், தாம் எதிர்பார்த்தபடி கவர்ன்மெண்டார் தங்களுடைய தவறுதல்களைத் திருத்திக்கொள்ளவில்லையென்றும், பஞ்சாபில் பெருவதை செய்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லையென்றும் சட்ட சபைகளைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும், வோட்டர்கள் பிரதிநிதிகளாக நிற்போருக்கு வோட்டுகள் கொடுக்கக்கூடாதென்றும் வற்புறுத்தி ஜனங்கள் மனதுருகும்படி மகாத்மா காந்தியடிகள் தற்கால நிலையைப்பற்றி விளக்கினார்கள். மகாத்மா காந்தி சொல்லியதை வாக்கியம் வாக்கியமாகச் "சமரஸபோதினி" ஆசிரியர் ஸ்ரீமான். ஈ. சூரியநாராயண ஐயர் அவர்கள் ஆங்கில மறியாத ஜனங்களுக்கு மனதில் படும்படியும், உருக்கமாகவும் கம்பீரமாகவும் மொழிபெயர்த்துச் சொன்னார்கள்.

இரண்டாவது மேடையில் 'மௌலானா சௌக்கத்தலி பிரசங்கித்ததை ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் தமிழில் மொழி பெயர்த்துக்கூறினர். இருமகான்களுடைய பிரசங்கம் முடிந்த பிறகு இவர்கள் நேராக ரெயில்வேஸ்டேஷனுக்குச் சென்றார்கள். பகல் 12 மணிக்குத் திரிச்சிக்குச் செல்கிற பாஸஞ்சரில் ஏறிப்பிரயாணமானார்கள்.

உலகப்போக்கு.

ஜில்லா.

ஸ்ரீமான் கே. ஜி. ரங்கசாமி முதலியார், மன்னார்குடி முனிசிபல் சேர்மனாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

*　　*

நாகப்பட்டணம் ஸப்ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் டி. எஸ். சபாபதிபிள்ளை கூட்டு ஸப்ரிஜிஸ்டிராராக அவ்விடமே வேலை பார்க்க நியமனம்.

*　　*

சிவில் உதவி ஸர்ஜன் மிஸ்டர் பி. ஆர். வெங்கடராம அய்யர் எம், பி வி. எம். லீவு கழிந்து வந்தவுடன், மாயவரம் முனிசிபாலிட்டி வைத்திய இலாகாவில் வேலைபார்க்க நியமனம்,

*　　*

ஸ்ரீமான் ஊசயத்சுப்டல் மாஸ்ஜிட சாகேப் பகதூர், தஞ்சை முனிஸிபல கவுன்ஸிலர் வேலைப் பார்க்க நியமனம் பெற்றிருக்கின்றார்.

*　　*

காவேரி டிவிஷன், எக்ஸ்கூடீவ் இன்ஜினீர் மிஸ்டர் பி. பரமேசுவரம்பிள்ளை, பி. ஏ. பி. இ. தம் வேலையுடன், மிஸ்டர் பி. எஸ். ராமசாமிய்யர் வண்ணார் டிவிஷனிற்கு வரும்வரையில், அதன் வேலையையும் பார்க்க உத்தரவு பெற்றிருக்கின்றார்.

*　　*

திருவனந்தபுரம், கொச்சின்உதவி ரெஸிடெண்டான மிஸ்டர் இ. வி. உட் ஐ. வி. எஸ். என்பவர், அவ்வேலை பார்ப்பது முடிந்தவுடன் தஞ்சை மெம்பர் ஒன்றுவது பார்டிக்கி, விசேஷ உதவி ஸெடில்மெண்ட் ஆபீசராகவேலைபார்க்க நியமனம் பெற்றிருக்கிறார்.

*　　*

மிஸ்டர் பி. ஜி. ஆஸ்ட்வர்த ஐ வி. எஸ். என்பவரையும் தஞ்சை மெம்பர் ஒன்றுவது பார்டிக்கு, விசேஷ உதவி, ஸெடில்மெண்ட் ஆபீசராக வேலை பார்க்க நியமனம் பெற்றிருக்கிறார்.

உள்நாடு

வெளிஜில்லாக்களிலுள்ள முக்கிய மெயின் ரோடுகளைக் கவர்ன்மெண்டார் தம்மேற்பார்வையில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்த ரோடுகளிலுள்ள ஆறுகளுக்கும் ஓடைகளுக்கும் மேல் பாலங்கள் போடப்படாமலிருந்தால், அவைகளுக்குக் கூடியசீக்கிரத்தில் பணம் கிடைத்தவுடன் பாலங்கள் கட்டப்படுமென்று இப்போது கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கிறார்கள். ஜில்லாபோர்டு பிரஸிடென்டார்களும் தங்கள் நிர்வாகத்திலிருக்கப்பட்ட பாலங்களில்லாத ஆறுகள் ஓடைகள் முதலியவைகளின் எண்ணிக்கையையும் அவைகளின் இருப்பிடத்தையும் அவைகளுக்கு வேலை ஆரம்பிக்கச்சௌகரியமான இடங்களையும்கவர்ன்மெண்டாருக்கு அறிவிக்க வேண்டுமென்று விளம்பர சபையார் பகிரங்கம் செய்திருக்கிறார்.

*　　*

கல்வி இலாகாத்தலைவரான கனம் மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் தேக அசௌகரியமாயிருப்பதால், அவருக்குப் பதிலாக மிஸ்டர் ஸ்டாதம் அவரது வேலையைப் பார்ப்பரென்று தெரிகிறது.

*　　*

கொச்சி துறைமுக விஷயம் பழையது. அதைக்கட்டி முடிப்பதற்குரியவேலைகளை ஆலோசித்து முடிவுசெய்யும் பொருட்டு 14 அங்கத்தினர்கள் கொண்ட கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

*　　*

திருக்காட்டுப் பள்ளியில் ஆகஸ்ட்டு மாதம் 5ஆ தேதி ஹைஸ்கூலில் சில மிராசுதார்களும், உபாத்தியாயர்களும் சேர்ந்து ஓர் கூட்டம் கூடினார்கள். அப்பொழுது ஸர். பி. எஸ். சிவசுவாமி அய்யர் தாம் சட்டசபைக்கு ஒரு அபேட்சகராக நிற்பதாகவும், ஜனங்களுக்கு உதவிசெய்யத்தயாராயிருப்பதாகவும் பிரசங்கம் செய்தார்.

*　　*

மிஸ்டர் டி. எ. பாலகுருசாமி உடையார் தஞ்சாவூர் ஜில்லா போர்டுமெம்பராகவிருக்கும்படி மன்னார்குடிதாலுக்காபோர்டாரால்தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

*　　*

பாங்கர் மிஸ்டர் எஸ். எ. ஆர். எம். இராமநாதன் செட்டியார் தஞ்சாவூர் தாலுக்கா போர்டு மெம்பராக விருக்க நியமனம்.

*　　*

மிஸ்டர் என். ரகுநாத ராஜாளியார் கும்பகோணம் தாலுக்கா போர்டு மெம்பரகவிருக்க நியமனம்

*　　*

சென்ற மாதம் 30ஆ தேதியோடு முடிவடைந்த வாரத்தில் தென்னிந்தியா ரெயில்வேயின் வருமானம் 7,62,099 ரூபாய், தஞ்சைஜில்லாபோர்டு ரெயில்வேயினின்று 23 286 ரூபாயும்திருவாங்கூர் கிளை ரெயில்வே 30,767 ரூபாயும் சோரனூர் கொச்சி ரெயில்வே 17,372 ரூபாயும் கிடைத்திருக்கின்றன.

*　　*

கல்கத்தாவில்கூடும்விசேஷ காங்கிரஸுக்குச் சென்னையினின்றும்ஒரு ஸ்பெஷல்வண்டியில்பிரதிநிதிகள் போகவேண்டுமானால், போகவிருப்பமுடையவர்கள் சென்னைமாகாணகாங்கரஸ்கமிட்டி காரியதரிசிக்குமுன்னதாகவேஇம்மாதம்25ஆ தேதிக்குள் அறிவித்துபணத்தையும் அனுப்பிவிடவேண்டும். முதல் இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளில் நூறு பெயருக்குக் குறையாமலிருக்க வேண்டுமாம்

*　　*

மதுரை ராமநாதபுரம் வக்கீல் குமாஸ்தாக்களின் 2வது மகாநாடு செப்டம்பர் மாதம் 19ஆ தேதி ஞாயிற்றுக்கிழமை மதுரையில் நடைபெறும். மதுரை ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் எம். நாராயணசாமி ஐயர் அக்கிராசனம் வகிப்பர். வக்கில் குமாஸ்தாக்களின் பொதுவிஷயங்கள் இதில் கவனிக்கப்படுமாகையால் எல்லா குமாஸ்தாக்களும் வரவேண்டப்படுகிறார்கள். டெலிகேட்டுகளின் கட்டணம் ரூபா 2.

*　　*

விசுவகர்ம மகாஜன மகாநாடு இம்மாதம் 21, 22ஆ தேதிகளில் மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் நடைபெறும்.

*　　*

லிலோனில் சோகோலேட் கோகோ என்னும் பாண்யாரப் பொருள்களை உண்டாக்குவதற்கு ஒரு பெரிய கம்பெனிஏற்பட்டிருக்கிறதென்றும் அதைக் கார்டன் பிரேஸர் கம்பெனியார் நிர்வகிப்பரென்றும் லிலோன் டேயிலி நியூஸ்பத்திரிகை கூறுகிறது.

சென்ற வருஷம் டெல்லியில் கலகம் நடந்த சம்பந்தமாகக் கவர்ன்மெண்டாரால்விதிக்கப்பட்ட தண்டவரியை வசூலிக்க முயற்சிசெய்யப்படுகிறது. அங்கேர் டாக்டர் அன்சாரியும் மிஸ்டர் ஆஸப் அலியும்தண்டவரி செலுத்தக்கூடாதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

*　　*

இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் சட்டமெம்பராயிருந்த ஸா ஜார்ஜலவண்டிஸுக்குப் பதிலாக அலகபாத் வக்கீலும், மிதவாதியுமான டாக்டர் டெஜ்பகதூர்சப்ரு சட்டமெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

*　　*

இம்மாதம்22ஆதேதிகூட விருந்தடிரேடுயூனியன்காங்கரஸ் இந்தியாவில் ஆங்காங்குள்ளதொழிலாளர் சங்கங்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புவதற்குச் சாவகாசம் கொடுக்கும் பொருட்டுத் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. தேதிகுறிப்பிடப்படவில்லை.

*　　*

இம்மாதம் 21-8-20 ஆதேதி சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குக் கரந்தைத்தமிழ்ச் சங்கத்தின் 9-வது ஆண்டின் விழா திரு கந்தப்பா செட்டியார் சத்திரத்தில் நடைபெறும். அபபொழுது தூற்றுக்குடி ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல. அவர்கள் தலைமைவகிப்பார். தமிழபிமானிகள் வரகோரப்படுகிறார்கள்

*　　*

தஞ்சை சர்க்கில் தேவஸ்தான கமிட்டிக்கும் கனம் பாப்பநாடு ஜமீன்தார் ஒரு மெம்பராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

*　　*

தஞ்சை முனிசிபல் சேர்மென் ஸ்தானம் மாலியாகவிருக்கிறது. ஸ்ரீமான் அப்புராவ் அவர்கள் இந்தஸ்தானத்திற்கு அபேட்சகராக நிற்பதாகத் தெரிகிறது.

தவறிப்போன பத்திரம்.

நான் சில மாதங்களுக்கு முன் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு கோர்ட்டிலிருந்து சாயந்திரம் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கையில் அடியில் கண்ட ஒரு பத்திரத்தைக் கண்டெடுத்தேன். அதில் கண்ட சமாச்சாரமாவது:— திரிச்சினாப்பள்ளி ஜில்லா தின்னியம் கிராமத்தைச் சேர்ந்த மணக்கொல்லை கிராமத்திலிருக்கும் ரங்க நாடார் குமாரர் கோவிந்த நாடாருக்குத் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட்டு திருக்காட்டுப்பள்ளி சப் டிஸ்டிரிக்ட்டு மாரநேரி மாகாணம் காங்கியம்பட்டி வட்டம் சேர்ந்த கோட்டறப்பட்டி கிராமத்தில் ஏக்கர் 1. செண்டு 22. இந்த நிலத்தின் பேரில் ரூ 250 க்கு 5 வருஷகெடுவுக்கு தஞ்சாவூர் தாலுக்கா கோட்டறப்பட்டி கிராமம் மேல் வளவு சவுரி முத்து உடையார் மகன் இன்னாசி முத்து உடையார் எழுதிக்கொடுத்திருக்கிற ஒத்திப்பத்திரத்தை கண்டெடுத்து. பிறகு ஷை பத்திரத்தின் உடையவராகிய ஷை கோவிந்தநாடாருக்கு என்னால் 2 கடிதங்கள் போட்டும் ஷை கோவிந்தநாடாராவது ஷையார்களுடைய வார்சுகளாவது நாளது தேதி வரையில் வந்து ஷை பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் இன்றையதினம் முதல்கொண்டு பதினைந்து நாட்களுக்குள் ஷை கோவிந்தநாடாராவது ஷை யாருடைய வார்சுகளாவது அடியில் கண்டவரிடம் தகுந்த ஜாமீன் சாக்ஷிகளுடன் வந்து பெற்றுக்கொள்ள வேண்டியது. அப்படி வந்து பெற்றுக்கொள்ளாத பக்ஷத்தில் அது போலீஸ் ஸ்டேஷனில் ஒப்பிவிக்கப்படுமென்பதைத் தஞ்சாவூர் கோட்டைக்குள் சாநாயக்கன் தெரு 1979 நெ. வீட்டிலிருக்கும் T. V. சஞ்சீவராவ் தெரிவிக்கிறார்.

தஞ்சை ஜில்லா 14வது மகாநாடு

அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்.

சென்றவார போதினியின் 9ம் பக்கத்தொடர்ச்சி.

இம்மாதம் 7, 8ந்தேதிகளில் பாபநாசத்தில் கூடிய மேற்கண்ட மகாநாட்டின் அக்கிராசனப் பிரசங்கத்தில் சென்றவாரம் ஒருபகுதியைப் பிரசுரித்தோம். மற்றப் பகுதியின் சுருக்கத்தை இந்த வாரம் நாம் கீழேவெளியிட்டிருக்கிறோம். நேயர்கள் கவனிப்பார்களாக:—

நம்மை அவமதிக்கிறார்கள்.

இக்காலத்தில் காரியங்கள் விரைவாக சம்பவிக்கின்றன. திருநெல்வேலியில் மாகாணமகாநாடு நடந்த பிறகு, நமக்கு அச்சத்தை உண்டு பண்ணக்கூடிய காரியங்கள் நடந்திருக்கின்றன. ஜெனரல் டயர் விஷயமாக காமன்ஸ் சபையிலும் லார்டு சபையிலும் நடந்த வாதங்களிலிருந்து, இங்கிலாந்தில் செல்வாக்கும் பொறுப்பு முள்ளவர்களுக்கு நீதியையும் மனுஷ்ய தர்மத்தையும் விடஜாதியே பெரிதென்பது நமக்கு விளங்கிவிட்டது. "மிருகத்தனமான கொடுமை ஒன்றை சரிதானென்று லார்டு சபையில் பெரும்பாலோர் வெட்கங் கெட்டு ஒப்பினதிலிருந்து நமக்குத் துக்கம் உண்டாகிவிட்டது. இந்தச் சபை மெம்பர்கள் தான் நம்மை ஆள அனுபபடுகிறார்கள் என்று ஸர் ரவீந்திரநாதர் சொல்லியிருப்பதே சரி. ஜெனரல் டயர் குற்றமொன்றும் செய்து விடவில்லை யென்று லார்டு சபை முடிவு செய்துவிட வேண்டுமென்று லார்டு பின்லே, லார்டு ஹால்ஸபரி, லார்டு ஸம்மர் ஆகியவர்கள் பேசியதைவிட அவர்கள் நமக்குச் செய்யக்கூடிய அவமானம் வேறில்லை. காமன்ஸ் சபையில் மிஸ்டர் மாண்டேகு கேட்ட கேள்வி சரியான கேள்விதான். இந்தியாவைப் பயமுறுத்தியும், இந்தியர் வேறு ஜாதியினர் என்பதற்காக அவமானப் படுத்தியும், அவர்களைக் கீழ்ப்படுத்தியும் பயங்கரமான காரியங்களைச் செய்தும் நீங்கள் இந்தியாவில் உங்களுடைய ஆதிக்கம் நீடித்திருக்கும்படி செய்யப் போகிறீர்களா? அல்லது அந்த தேசஜனங்களின் விசுவாசம் பெருகும்படிசெய்து உங்களுடைய ஆதிக்கம் நீடித்திருக்கும்படி செய்யப்போகிறீர்களா?" என்று அவர் கேட்டார். ஜெனரல் டயர் செய்தகாரியம் பிரிட்டிஷாரின் சரிதத்தில் பெரியகொடுமை என்று மிஸ்டர் ஆஸ்குவித் சொன்னார். அந்தக் கொடுமைக் காகத் தண்டித்தோம் என்று பெயருக்கு மாத்திரம் தண்டித்ததை ஆதரித்து லார்டு கர்ஸன் லார்டு மில்னர் முதலியவர்களே பேசவேண்டியிருந்த தென்றால், கெடுதிக்காரர்கள் பலம் பெற்று விட்டனர் என்பது நிச்சயம். டயரை ஆதரித்துப் பேசப் புகுந்த பெரிய வக்கீல்கள் பஞ்சாபில் நடந்த ஒழுங்கீனம் ராஜாங்கப் புரட்சி என்றும், ஜாலியன் வாலா தோட்டத்தில் நடந்த படுகொலை நியாயமான தென்றும் பேசினார்கள். இந்தியர்களுக்கும் புத்தியில்லை யென்றாவது அல்லது இம்மாதிரி பிதற்றக் கேட்டு அவர்கள் பயந்து போய் விடுவார்கள் என்றாவது லார்டுகள் நினைக்கிறார்களோ? ஜெனரல் டயர் செய்ததும் பஞ்சாபில் நடத்தப்பட்ட ஆட்சியும் க்ஷேமமென்றுபேசினால் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கு முள்ள அன்னியோன்யம் விருத்தியாகுமென்று இந்தியாவிலோ இங்கிலாந்திலோ இருக்கிற ஆங்கிலேயர்கள் நினைக்கிறார்களா? லார்டு சபையில் லார்டுபின்லே கொண்டுவந்த தீர்மானம் எதை உத்தேசித்ததுஎன்பது இந்தியர்களுக்குத்தெரியாதா? அதற்காகவேறு சமத்காரமான சமாதானத்தைப்பிறகுசொன்னால், அதைஇந்தியா நம்புவாரா? அதிமுக்கியமான தேசிய அல்லது ராஜிய விஷயங்களைப்பற்றி ஆங்கில வக்கீல்கள் சொல்லும் அபிப்பிராயங்களை நாம் மதிப்போமா? லார்டுசபையினருக்கு எள்ளளவும் ராஜ தந்திரமென்பது கிடையாது என்பது விளங்கி விட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்குக் கேட்டை அவர்களுடைய காரியம் செய்து விட்டது; பஞ்சாபில் நடத்தப்பட்ட ராணுவ அமுலானது அதிகாரவர்க்கத்தினிடத்தில் அலட்சிய புத்தியை உண்டுபண்ணிவிட்டதைவிடலார்டுசபையின்வாதம் அதிகமாகச்செய்து விட்டது. ராஜியத் துறையில் வெகு பிற்போக்குள்ளவர்களுக்குக்கூடபிரிட்டிஷ் நியாயத்தினிடத்தில் நம்பிக்கை போய்விட்டது; டயருக்கு வெகுமானம் செய்வதற்காக இந்தியாவிலும்பணம் சேகரிப்பதானது இந்தியருடைய அபிப்பிராயத்தை உதாசினம் செய்வதற்கல்லவா? பஞ்சாபில் நமக்கேற்பட்ட அவமானத்தை நாம் எந்நாளும் மறக்க முடியாமல் இது செய்யாதா? நம்முடைய குணத்திலிருந்த சிறு பிள்ளைத்தனம் போய் ஆண்தன்மை உண்டாகி விட்டது.

சட்ட சபைகளை வசப்படுத்த வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைகளை எட்டிப் பார்க்கக் கூடாதென்று நமக்குள் சிலர் யோசனை சொல்லுகிறார்கள். அப்படியே நாம் செய்து விடவேண்டுமென்று காங்கிரஸுக்கு எதிரானவர்களும் பிற்போக்குடையவர்களும் வெகு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தின் படியே வெகு ஜனங்களுக்கு ராஜீய சுதந்தரமேற்பட்டிருக்கிறது. இந்த சமயத்தை உபயோகப்படுத்தி அவர்களுக்கு ராஜீய ஞானத்தை உண்டு பண்ணவும் அவர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குட்படுத்தவும் காங்கிரஸ்காரர்கள் தவறிப் போனால் அவர்கள் ராஜீய தற்கொலைசெய்துகொண்டு விடுவார்கள்.

சட்ட சபைகளில் எத்தனை ஸ்தானங்களைத்தாங்கள் வசப்படுத்திக்கொள்ள முடியுமோ அத்தனை ஸ்தானங்களை காங்கிரஸ் காரர்கள் வசப்படுத்திக் கொள்ளத் தவறினால் அவை பிறர் வசப்பட்டுப்போகும்.

இனி காங்கிரஸின் பிரதிநிதிகள் சட்டசபைகளிலிருந்து காங்கிரஸின் அபிப்பிராயங்களை அங்கு ஆதரித்தால் தான், அந்த அபிப்பிராயங்களுக்கு யோக்கியதை உண்டாகும். காங்கிரஸ் காரர்கள் சட்ட சபைகளில் புகுந்து விட்டால் சட்டப்படிக்கான கிளர்ச்சி தொனியிலும் உருவிலும்விருத்தியாகாது என்று சொல்லுவது சரியல்ல.

ஆகையால் என்னுடைய தேசத்தார் காங்கிரஸ்காரர்களைப் பெருவாரியாகப் புதுச் சட்ட சபைகளுக்கனுப்பி, தாங்களும்காங்கிரஸின் அபிப்பிராயங்களை நன்கறிந்து கொண்டு அந்த அபிப்பிராயங்களைத் தங்களுடைய பிரதிநிதிகள் சட்டசபைகளில் வற்புறுத்தும்படி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒற்றுழையாமை.

கிலாபத்து விஷயமான கிளர்ச்சி நடத்தப்படவேயில்லை என்றோ அல்லது அதை அலட்சியம் செய்து விடலாம் என்றோ இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள கவர்ன்மெண்டுகள் நடந்திருக்கின்றன; பஞ்சாப் விஷயமாக நியாயம் செய்யவேண்டுமென்ற மென்ற கோரிக்கையே செய்து கொள்ளப்படவில்லை என்றோ எல்லது அதை அலட்சியம் செய்து விடலாம் என்றோ அவை நடந்திருக்கின்றன. அப்படி நடந்திருக்கக் கூடாது.

பஞ்சாப் விஷயமாக எல்லா வகுப்பு ஜனங்களும்நாள்தோறும்பேசுகிறார்கள். கிளர்ச்சிசெய்து என்ன பலன் உண்டாகப்போகிறதென்று ஆத்திரப் பட்ட காலத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாகி விடுவது ஆச்சரியமல்ல; இந்தியர் படிப்படியாகயோசனை செய்கிறவர்களாகையால், ஒற்றுழையாமை என்றஉபாயம்தவிரவேறொன்றுமில்லை என்று நினைக்கிறார்கள். கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரத்தை தாட்சண்ணியமில்லாமல் அலசிப்பார்த்திருத்துகிறதற்கு வழியையோசிக்கிறார்கள். இந்தியஜனங்கள்கிருபையுள்ளவர்களாகையால், பஞ்சாபில் செய்யப்பட்ட அக்கிரமத்தை நினைத்து மனமுருகி, தியாகபுத்தியுள்ளவர்களாகையால் நியாயம்பெற எந்தத் தியாகத்தையும் செய்யத்துடிக்கிறார்கள். ஜனங்களுக்குத் துக்கமும் ஆத்திரமும் மேலிட்டிருக்கையில், கவர்ன்மெண்டுகளோ அல்லது இந்தியாவிலும் இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயர்களோ ஜனங்களுக்குப் புத்தி சொல்வதோ அல்லது எச்சரிக்கை செய்வதோ அல்லது வேறு ஏதேனும் செய்வதோ சரியுமல்ல; புத்திசாலித்தனமான காரியமுமல்ல. எனது தேசத்தாரையும் நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் பிரரேபணை செய்யப்பட்டிருக்கிற ஒற்றுழையாமைக் காரியங்கள் அனுஷ்டானத்தில் சாத்தியமா என்பதை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயங்களைத் திருநெல்வேலியில் நான் தெளிவாகவே சொல்லுகிறேன். பிரயோஜனப்படும்படி அது உபயோகமாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை; ஒரு கட்சியின் முறையாக அதைப் பாவிக்காமலிருந்தாலல்லது, காங்கிரஸ் காரர்களுக்குள் அது பிளவை உண்டுபண்ணாதிராது. அதைப்பற்றி அவரவர்கள் அபிப்பிராயம் கொடுத்து விட்டிருந்து விடமுடியாது; ஆனால் அவரவர்கள் பிரதிக்ஞை செய்துகொண்டு அதன்படி நடக்கவேண்டியிருக்கும். காங்கிரஸ்காரர்கள், சட்ட சபைகளுக்குப் போகிறதில்லை என்று இருந்து விட்டார்களாயின், எதிர்க்கட்சிக்காரர்கள் அரசியல் திருத்தச் சட்டத்தை எவ்வளவு கெடுத்து விடுவார்களோ அதைவிட அதிகமாகக் கெடுத்து விடுவார்கள்.

காங்கிரஸே மகாஜன சபை.

இந்த மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி மிகவும் வலுத்துப் போய் விட்டது. எங்கு பார்த்தாலும் அந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. மிதவாதத் தலைவர்கள் என்று பெயர் பெற்றிருக்கிறவர்களும் அநேகர் நமது வழியில் வந்துகொண்டிருப்பது கவனிக்கத்தக்க விஷயம். ஸர் சிவஸ்வாமி அய்யர், மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் ஆகியவர்கள் பேசுவது கூட (ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகளும் மிதவாதப் பத்திரிகைகளும் சொல்லுவது போல்) அமிதவாதத் தொனியை அடைந்து வருகிறது. சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள பிற்போக்கான விதிகளையும், லார்டு சபையில் டயர் விஷயமாக வாதம் நடந்த பொழுது ஜாதி உணர்ச்சியின்மேல் குசிப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்களையும் கவனித்து காங்கிரஸ் கட்சியின் நிலைமைதான் நியாயமானதென்று உணர்ந்து ஒன்றாகச் சேர்ந்துகொள்ள அவர்கள் விரும்புகிறார்களோ என்னவோ தெரியவில்லை. சட்டசபைக்குத் தெரிந்தெடுக்க வேண்டிய காலம் நெருங்கி விடுவதால் "மெட்ராஸ் லிபரல் லீக் என்ற மிதவாத சபையின் மெம்பர்களில் வெகு பிரசித்திபெற்றவர்கள் கூட தேசியக் கட்சியாரின் நிலையையும் தொனியையும் கைக்கொண்டுவருகிறார்கள்போல் தோன்றுகிறது. உண்மையான காங்கிரஸ் காரர்களையே சட்ட சபைகளுக்கு அனுப்பவேண்டுமென்று மாகாணமெங்குமுள்ள ஓட்டர்களை நான் வேண்டிக்கொள்கிறேன். மிதவாதிகள் போட்டியாக ஏற்பட்ட "லிபரல்லீக" என்ற சபையிலிருந்து விலகிவிட்டால் தான், அவர்கள் உண்மையில் காங்கிரஸ்காரர்களாக இருக்க முடியும்,

சமீபத்தில் ஸர். பி. தியாகராஜ செட்டியார் ஹாஒப்ளியில் பேசின பொழுது, காங்கிரஸை மட்டின்றித் திட்டினார். அதேவழியில் போக நான் இஷ்டப்பட வில்லை. காங்கிரஸ் பாமரக் கூட்டம்என்று அவர் சொன்னார். பாமரக் கூட்டத்தைப் பற்றி அவருக்கு விசேஷ ஞானம் உண்டு போலும். காங்கிரஸ்காரர்கள் அமிதவாதிகள் என்றும், பிற்காலத்தில் ராஜாங்கப் புரட்சி ஏற்படுகிறதற்கு இப்பொழுது அவர்கள் விதைபோட்டு வருகிறார்கள் என்றும், ஜன சமூகத்தில் அவர்கள் பழகும்படி விடக்கூடாதென்றும், அவர்கள் திடீரென்று முளைத்த ராஜீய வாதிகள் என்றும், திட்டுவதிலும் அவதூறு சொல்லுவதிலும் அவர்கள் தேர்ந்தவர்கள் என்றும் அவர் சொன்னார். அப்படியாயின் ஸர். பி. தியாகராஜ செட்டியார் பேசியதை என்னென்றும் சொல்வது? நமதுபிராமணரல்லாத சகோதரர்களே யோசித்துப் பார்க்கட்டும்.

கல்வி.

இனி, கல்வி விஷயமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லுகிறேன். கல்வி போதிக்கும் விஷயத்தில் சிறிது காலமாக நிஷ்பிரயோஜனமான முறையை அனுசரிக்கிறதாகத் தெரிகிறது. பரிட்சைகள் பள்ளிக்கூடத்தில் சொல்லிவைத்ததையும் சோதிப்பதாக இல்லை. பையன்களுடைய அறிவு திறமை இவைகளைச் சோதிப்பதாகவுமில்லை. இன்னும் இலகுவான ஏற்பாட்டை ஏன் செய்யக்கூடாது? காரியத்துக்கு வேண்டியவரையில் இங்கிலீஷிலும் தேசபாஷையிலும் பரிச்சியமிருக்க வேண்டும்; சாஸ்திரத்தில் பயிற்சிவேண்டும், தேகாப்பியசம் அவசியம். இவை தவிர, மற்றப்படிப்பெல்லாம் தொழிற் படிப்பாகவே இருக்கவேண்டும். பொதுப் படையாகச் சொல்லிவிடாமேயல்லாமல், இன்னின்ன பாடம் கற்பிக்கப்படவேண்டுமென்று ஒரு திட்டம் தயார் செய்வது சிரமந்தான். இந்த விஷயத்தைப் பொறுமையுடனும் சாமர்த்தியத்துடனும் இந்தியாதான் முடிவு செய்ய வேண்டும். ஆசிரியர்களும் ஆசிரியரல்லாதவர்களும்சேர்ந்து தங்களது புத்தியை உபயோகப்படுத்தினால்இந்த விஷயத்தைத்திருப்திகரமாக முடிவு செய்துவிடலாம். ஆயினும் கல்விபோதிக்கும் ஆசிரியர்கள்தான் இவ்வேலையில் முதலில் இறங்க வேண்டும்.

தொழில்.

இந்த ஜில்லா வானது புத்தியிலும், செல்வத்திலும் பிரயாசையிலும்உயர்ந்திருந்தாலும்தொழில் துறையில் பின் தங்கியிருப்பதானது அதிசயமாகவிருக்கிறது. இந்திய சிப்பாயைப் பயிற்சி செய்துவைத்து விட்டால், அவன் ஐரோப்பியனைப் போல் நன்றாய்ச் சண்டைசெய்வான் என்று கிளைவும் டுப்ளேயும் கூறினார்கள். ஐரோப்பியர்களைப் போல் திறமையாகத்தொழில் செய்ய ஐரோப்பியரால் பயிற்சி செய்விக்கப்பட வேண்டு மென்று நீங்கள் விரும்புகிறீர்களா? இம்மாகாண ஜனங்கள் தாங்களே அதைச்செய்து நிர்வாகத்துறையிலும் ராஜீயத்துறையிலும் சட்டத்துறையிலும் போல் தொழில் துறையிலும் தாங்கள மகோன்னத பதவியிலிருக்க முடியுமென்று காட்ட வேண்டாமா? இந்த ஜில்லா ஜனங்கள் காரியத்தில் திருஷ்டியுள்ளவர் களாகையால், இம்மாகாண ஜனங்களுக்கு வழிகாட்டி அவர்களுக்குள்ள நிந்தையை அகற்றுவார்களென்று நம்புகிறோம்.

நிலவரி

இனி ஸ்தல விஷயங்களைக் கவனிப் போமானால், நிலவரிப் பைசல் எல்லாவற்றிலும் முக்கியமானதாக இருக்கிறது. அதற்கான வேலைகள் நடந்து வருகின்றனவாகையால், அது விஷயமாக என்னசெய்யவேண்டும் மென்று நீங்கள்யோசனை செய்ய வேண்டும். இந்த மகா நாடோ அல்லது அது நியமிக்கும் ஒரு கமிட்டியோ என்ன நியமங்களின் மேல் நில வரியை நிர்ணயம் செய்யவேண்டுமென்று முடிவு செய்து, எப்படி வரும்படியை மதிப்பிடுகிற தென்பதையும், எவ்வளவுக்கு மேல் வரிபோடக்கூடாதென்பதையும் எத்தனை வருஷங்களுக் கொருதடவை வரியைப் புதுப்பிக்கவேண்டுமென்பதையும், என்ன சொத்துடையவர்களுக்கு எப்படி வரியை உயர்த்தி விதிக்க வெண்டுமமென்பதையும் தீர்மானிக்க வேண்டும், அதை அனுசரித்து, 'புதுச்சட்ட சபைகள் கூடினதும் சட்டம் செய்யஆரம்பிக்க வேண்டும்; இந்த ஜில்லாவில் நிலவரி விஷயமாக அனுபோக முள்ளவர்களும் அறிவில் நிபுணர்களும் ஏராளமாக இருப்பதால், இந்த ஜில்லாவின் அபிப்பிராயம் வெகு உபயோகமாக விருக்கும். மூன்று வழிகள்உண்டு. சாசவத்தாக நிலவரியை நிர்ணயம் செய்து விடுவது தான் இந்தச் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க உபாயம் என்று எல்லோரும் நினைக்கலாம், ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல; நிர்வாகத்தை நடத்து வோரின் லட்சியத்தைவைத்துக்கொண்டும் கவனிக்க வேண்டும். ஜனங்களின் லட்சியத்தைவைத்துக் கொண்டும் கவனிக்க அடிக்கடிஸெட்டில்மெண்டு செய்வது சௌகர்யமுமல்ல, விரும்பத்தக்கது மல்ல; ஸர்வே இலாக்காவின் பொருட்டும் ஸெட்டில் மெண்டு இலாக்காவின் பொருட்டும் செய்யப்படும் பெரிய செலவு சாசுவத ஸெட்டில்மெண்டினால் நோமற் செய்துவிடப்படும். விவசாயிகளின் வரும்படி வர வர விருத்தியாகி, அவர்களுடையவாழ் வின் தரம் உயரும். விவசாய அபிவிருத்திகளையும் தொழில்களையும் செய்ய அவர்களுக்கு சௌகரிய மேற்படும். ஆனால் சாவசுவத ஸெட்டில் மெண்டின் பலனாக ராஜாங்கத்தின் வரும்படி விருத்தியாக முடியாமற் போய்விடும். அப்பொழுது அவர்கள் வேறு வரிகளை விதிக்க வேண்டியிருக்கும். கல்வி, சுகாதாரம், வைத்தியம் முதலிய கார்யங்களின் பொருட்டு செலவு அதிகமாகிக் கொண்டே போகுமாகையால் விருத்தியாகக் கூடிய ஆதாய மூலம் ஒன்று ராஜாங்கத்துக்கு இருக்க வேண்டியது அவசியமாகும். மேலும் சாசுவத ஸெட்டில்மெண்டின் பலனாக சிறிய மிராசுதார்களை விடப் பெரிய மிராசுதார்களுக கெல்லாம் தாரமஷ்டக்குமேல் அதிகமாக விருக்கும். மேலும் இப்பொழுதிருக்கிற முறை ஜனங்களுக்குப் பழக்கமானதால் புதுமுறை ஒன்றை அவர்கள் விரும்பாதிருக்கலாம். சாசுவத செட்டில்மெண்டு செய்தால் புதுமுறை தான் ஏற்படும். எல்லையில்லாமல் நிலவரியை உயர்த்தமுடியாது. இனி வேறு வரிகளைப்போட வேண்டிய காலம் வரலாம். இந்தியாவோ விவசாய தேசமாயிருப்பது மாறி தொழில் செய்யும் தேசமாக மாறிக்கொண்டிருக்கிறது. செலவு செய்யும் இலாக்காக்களின் செலவு ஏராளமாக இருப்பதுடன், செலவு செய்யும் இலாக்காக்கள் புதிதாக ஏற்பட்டு வருகின்றன. மேனாட்டு நாகரிகப் பழக்கத்தினால் ஜனங்களுடைய வரவுச் செலவோ அதிகமாகி வருகிறது. சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மற்றச் சிப்பந்திகளுக்கும் சம்பளம் உயர்ந்து வருகிறது, கல்வியின் பொருட்டு செலவு பெருகிவருகிறது. பாங்குகள் முறிந்து போய் திரவிய நஷ்டம் ஏற்படுகிறது, ராணுவச் செலவும் கடறபடைச் செலவும் அதிகமாகி வருகின்றன. இப்படியெல்லா மிருக்கையில் ராஜாங்கத்தின் செலவுக்கு நிலவரி ஒன்றையே முக்கியமாக நம்புவது கூடாதென்று வாதிக்கலாம். விவசாயத்தினால் கிடைக்கும் வரும்படியின் மேல் வரி விதிப்பதும், சொத்துக்களைப் பராதீனம் செய்யும்போது வரி விதிப்பதும் வாரிசுகள் சொத்தை அடையும்போது வரிவிதிப்பதும் உசிதமென்று வாதிக்கலாம் கனம் வி. கே ராமானுஜாச்சாரியார் எழுதியிருக்கிற நிலவரி நிர்ணயம் என்ற நூலில உபரிவரி ஒன்று விதிக்கலாமென்று யோசனை சொல்லி யிருக்கிறார். செங்கல்பட்டு ஜில்லா மகாநாட்டின் 5-வது கூட்டத்தின் அக்கிராஸனத்தை நான் வகித்த பொழுது ஒரு யோசனை சொன்னேன். 30 ரூபாய்க்குக் குறைந்த கிஸ்தி ஏற்பட்டிருக்கும் நிலங்களுக்கு சாசுவத ஸெட்டில் மெண்டு செய்து விட்டு அந்த நிலங்களைத் தானே சாகுபடி செய்கிறவன் தவிர வெறு யாருக்கும் விற்கக் கூடாதென்று செய்து விடவேண்டுமென்று நான்சொன்னேன். நிர்வாகச் செலவுகள் நாளுக்கு நாள் பெருக்கி கொண்டிருப்பதை உத்தேசிக்கையில், எல்லா நிலங்களின் வரியையும் சாசுவத்தாக நிர்ணயித்து விடுவதுஉசிதமென்று நான் நினைக்க வில்லை. வருமானவரியுடன் சேர்த்தோ அல்லது தனியாகவோ விவசாய வரும்படியின்மேல் உபரிவரி ஒன்று நிர்ணயித்து விட்டால், ஸர்வே ஸெட்டில் மெண்டுஇலாக்காக்களாகிய சேனைகளைக்கட்டிக்கொண்டிருக்க வேண்டியிராது. இந்த உபரிவரியை வரும்படியின்மேல் தரவாரியாக விதிக்கலாம். அதுவரையில் இப்பொழுது ஒன்றுசெய்துவிடலாம். 30 வருஷத்திற்கு ஒருதடவை ஸெட்டில் மெண்டுசெய்கிறதற்குப்பதிலாக 60 வருஷத்திற்கொருமுறை செய்யவேண்டுமென்றும், 100-க்கு எத்தனை வீதத்திற்கு அதிகமாக வரி விதிக்கக்கூடாதென்றும் நிலத்தின் கிரயத்தை வரிவிதிக்கிறதற்கு ஒரு ஆதாரமாகவைத்துக் கொள்ளக்கூடாதென்றும் செய்து விடலாம். விளையாத வருஷங்களில் வரியை வஜா செய்ய சட்டத்தைக் கொண்டே ஏற்பாடு செய்து விட வேண்டும்.

கனம் வி. கே. ராமாநுஜாச்சார்யார், மிஸ்டர் என். கிருஷ்ணஸாமி அய்யங்கார் முதலிய அனுபோகஸ்தர்களின் உதவியைக்கொண்டு ராஜாங்கத்திற்கும் மிராசுதார்களுக்கும சௌகரியமாகவும், ஏழைமிராசுதார்களுக்கு அனுகூலமாக விருக்கும்படியும் ஒரு ஏற்பாட்டைக் கண்டுபிடிப்பீர்கள் என்றுநான் நம்புகிறேன்.

கண்ணம்பாடி அணைவிஷயமும் நீங்கள் கவனிக்கக் கூடியது. மத்யஸ்தரின் தீர்ப்பை ரத்து செய்து விட்டதற்கு நீங்கள் செய்த கிளர்ச்சியே காரணம்' புதுத்தீர்ப்பு செய்யும்படி இங்குள்ள கவர்ன்மெண்டார் கேட்டுவிடப் பட்டிருக்கிறார்கள். முடிவு செய்கிறதற்குமுன் ஜில்லாவின் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சத்திரம் ஐவேஜி விஷயமும் நீங்கள் கவனிப்பீர்கள். பிரயாணம் செய்யும் முறை இக்காலத்தில் மாறிப்போய் விட்டதால், தஞ்சாவூர் ராஜகுடும்பத்தார், ஏற்படுத்தின சத்திரங்களின் ஐவேஜி செலவாகாமல் குவிந்து கிடக்கிறதால் அது விஷயமாகச் சட்டம் செய்வது அவசியமாகி விட்டது. இவ்விஷயமாகக் கட்சி செய்யாமல் ஒருமுடிவுக்கு வருவீர்கள் என்று நம்புகிறேன்

ஜில்லா போர்டு ரயில்வே விஷயமாகவும் சீக்கிரம் ஒருமுடிவுக்கு வர வேண்டியது அவசியம். தென் இந்தியா ரயில்லேயின் நன்மையை உத்தேசித்து இந்த ரயில்வேயை அழுதிவிடலாம் அதை நிர்வகிக்க ஏற்பாடுசெய்ய வேணடுமென்று நீங்கள் கேட்பது வெகு நியாய மானது. இவ்விஷயத்தில் இன்னும் சிறிது ஊக்கம் செலுத்துவீர்களாயின் உங்களுடைய உத்தேசம் பலித்து விடும்.

விஜயசுந்தரம் 2-0-0.

	ரூ.	அ.		ரூ.	அ.
பாலாமணி	2	0	ஆனந்தமடம்	1	0
சந்திரரேகை	1	4	தர்மாமபாள்	1	2
அம்புஜாக்ஷி	1	12	மாயாசுந்தரி	0	8
மேனகா	1	8	வஜ்ரலேகை	0	12
வஸந்தமல்லிகா	1	8	ஜயலக்ஷ்மி	0	8
தானவன்	0	12	உதயவன	0	12

இன்னும் எல்லா தமிழ் புஸ்தகங்களும் கிடைக்கும். கேட்லாக் இலவம்.

சாரி அண்டு கம்பெனி,
தபாற் பெட்டி 281, மதராஸ்.

தஞ்சை ஜில்லா–போர்டு கூட்டம்.

தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

(சென்ற வாரப் பத்திரிகையின் தொடர்ச்சி)

இம்மாதம் 5 ந் தேதி ஜில்லா போர்டு கூட்டம் கூடியபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில தீர்மானங்களைச் சென்ற வாரம் வெளியிட்டோம். மிருதியுள்ளவைகளைக் கீழே பிரசுரித்திருக்கிறோம்.

11. 1920-ளு எப்ரல் மீ 20 உயிலிருந்து புதிதாய் ஏற்படப்போகும் கொரடாச்சேரி ஓவர்சியர் ஆபீசுக்கு மாதம் 1-க்கு வீட்டு வாடகை ரூ $3\frac{1}{2}$க்கு சாங்கிஷனைக் கோரிய 1920 ளு ஜுன் மீ 17 உயுள்ள ஜில்லா போர்டு இஞ்சினியருடைய R. C. 3022 L. W. of 1920 நெ. லெட்டர் படிக்கப்பட்டது.

தீர் :—சாங்கிஷன் செய்யப்பட்டது.

12. ஜில்லா போர்டு ஆபீஸில் பைண்டிங் வேலை செய்வதற்காக ரூ 74 விலையில் ஒரு கட்டிங் பிரஸ் என்னும் மெஷின் வாங்க சங்கிஷனைக் கோரிய 24—7—20உ யுள்ள ஆபீஸ் குறிப்பு படிக்கப்பட்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

13. தம்பிக்கோட்டை அதிராம்பட்டணம் ராஜா மடம் வடக்கு தெற்கு ரேஞ்சுகளில் உள்ள குளங்களின் தரைகளை அளந்து பார்க்கும் பொருட்டு கூலிகள் அமர்த்திக் கொள்வதற்காக ரூ 24-க்கு ஒரு திட்டம் அனுப்பி சாங்கிஷனைக் கோரிய ச. டி. கலெக்டருடைய 29—6—20உ யுள்ள R. C. 519 E. of 20 ஆபீஸ் குறிப்பு.

குறிப்பு:—கசிரா ஏரியின் விருத்தியாம்சத்திற்காக உள்ள ஐவேஜி ரூ 500-ரிலிருந்து ஈடு செய்து கொள்வது அங்கீகரிக்கப் பட்டது.

வாபீஸ் சேய்தல்.

13 க. கும்பகோணம் மகாமகத்திற்குச் சுகாதார ஏற்பாடுகள் செய்ய 9150 ரூபா சாங்கிஷன் செய்யப்பட்டது.

14. சீயாழி மகா-ா-ா-ஸ்ரீ சிதம்பரநாத முதலியார் அவர்கள் 9 வண்டிகளுக்கு கம்பவுண்டில் லைசென்ஸ் கொடுக்க ரூ 72 செலுத்தினரென்றும் ஆனால் 8 வண்டிகளுக்குத்தான் ரூல்படி லைசென்ஸ் கொடுக்கப்பட்டதென்றும் பாக்கி ரூ 8-யும் ஜில்லா போர்டு குளோசிங் பாலன்சிலிருந்து திருப்பிக் கொடுத்து விடலாமென்று சொல்லுகிற R. C. 1201 D. B. of 20 நெ. உள்ள ஆபீஸ் குறிப்பு படிக்கப்பட்டது.

தீர்மானம் :—சாங்கிஷன் செய்யப்பட்டது.

15. 1—5—19-ல் கம்பவுண்டிங்கு லைசென்சுக்காக தன்னால் செலுத்தப்பட்ட ரூ 24-யும் ஷை லைசென்சு கொடுக்கப்படாததனால் திருப்பி வாபஸ் கொடுக்கும்படி கோருகிற 1920-ளு ஜுன் மீ 23 உயுள்ள திட்டை முத்தையன் செட்டியாருடைய மனு படிக்கப்பட்டது.

தீர்மானம்:— குளோசிங் பாலன்சிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

16. தம்முடைய வண்டிகளுக்குக் கம்பவுண்டிங்கு லைசென்சு கொடுப்பதற்காகச் சீயாழி தாலுகா திட்டை கிராமத்திலுள்ள முத்தையன் செட்டியாரிடத்திலிருந்து வசூலிக்கப்பட்ட ரூ 10,8 இந்த தொகைகளை வாபஸ் செய்யும்படி ஷை யாரிடத்திலிருந்து வந்த 22—6—20 தேதியுள்ள மனுவும் படிக்கப்பட்டது.

ஜில்லா போர்டு மிருதியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

VII. சிவில் வேலைகளுக்கு திட்டங்கள் அனுப்பி சாங்கிஷனைக் கோருதல்.

17. தஞ்சாவூரில் "ராஜா" சத்திரத்தின் தோட்டத்தை சீர் படுத்த திட்டம் ரூ 300.

தீர்மானம்:—பட்ஜட் ஐவேஜியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

18. மணமேல்குடியில் பிரயாணிகளின் பங்களாவை திரும்பகட்ட திட்டம் ரூ 560-க்கு

குறிப்பு:—மணமேல்குடி சத்திரம் பழுது பார்க்க இருக்கும் பட்ஜெட் ஐவேஜியிலிருந்து போர்டாரின் உத்திரவை முன்னிட்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

தீர்மானம்:— ஒப்புக்கொள்ளப்பட்டது.

19. திருவாதியில் கலியாணமால் சத்திரத்தில் அவசரமாயுள்ள பழுதுகளைப் பார்க்க திட்டத்தொகை ரூ 500-க்கு.

குறிப்பு:—முன்னிடாத செலவுகளின் பட்ஜட் ஐவேஜியிலிருப்பது போர்டார் உத்திரவை முன்னிட்டு சாங்கிஷன் செய்யப்பட்டது.

20. சத்திரம் குரிச்சி குளத்தில் கலுங்கு கட்ட திட்டத்தொகை ரூ 280-க்கு

தீர்மானம்:—உத்திரவு செய்யப்பட்டது.

21. தஞ்சாவூர் ராஜா சத்திரத்தில் கிழண்டை வடவண்டை பக்கங்களில் காம்பவுண்டு சுவர் கட்ட ரூ 1900-க்கு.

தீர்மானம்:—சாங்கிஷன் செய்யப்பட்டது.

22. சைதாம்பாள்புரத்தில் சக்கரவர்த்தி தோட்டத்திலுள்ள சவுக்கண்டியை பழுது பார்க்க திட்டம் ரூ 65-க்கு.

தீர்மானம்:—சாங்கிஷன் செம்யப்பட்டது.

23. ஒரத்தநாட்டில் முக்தாம்பாள்புரம் சத்திரத்தின் தோட்டத்தை விருத்தி செய்ய திட்டம் தொகை 1800-க்கு.

தீர்மானம்:—பட்ஜட் ஐவேஜியிலிருந்து உத்திரவு செய்யப்பட்டது.

24. 2. நெ. ரோட்டு கிழக்கு 48-வது மைலில் வடிகால் வாய்க்காலுக்கு பாலம் கட்ட திட்டம் தொகை ரூ 160-க்கு.

தீர்மானம்:—சாங்கிஷன் செய்யப்பட்டது.

25. திருக்காட்டுப்பள்ளியிலிருந்து பெரிய அணைக்கட்டுக்குப் போகும் ரோட்டை பாதுகாக்க திட்டம் தொகை ரூ 530-க்கு.

தீர்மானம்:—சாங்கிஷன் செய்யப்பட்டது.

26. ஆயில் இஞ்சின் பம்பை பழுது பார்க்க திட்டம் தொகை ரூ 35—0—6-க்கு.

தீர்மானம்:— சாங்கிஷன் செய்யப்பட்டது.

27. பூந்தோட்டம் பள்ளிக்கூடத்தை விஸ்தாரமாய்க் கட்ட திட்டத் தொகை ரூ 2700-க்கு.

"நாகப்பட்டணம் தாலுகா போர்டு பிரஸிடெண்டினால் அனுப்பப்பட்ட புதிய திட்டம்"

தீர்மானம்:—சாங்கிஷன் செய்யப்பட்டது

முடிவடைந்தவேலைகளின் ரிபோர்ட்.

28. 23—3—20-ல் D, B. R. நெ. 55-ல் ரூ 150-க்கு அம்மாசத்திரத்திலுள்ள சத்திரம் தோட்டங்களின் விருத்தியாம்சத்திற்கு சாங்கிஷனான தொகைக்கு முடிவு ரிபோர்ட்டு அனுப்பி சாங்கிஷனைக் கோரிய 15—7—20உயுள்ள ச. டி. கலெக்டருடைய R. C. 5388 of 20 ஆபீஸ் குறிப்பு.

தீர்மானம்:— ரிகார்டு செய்யப்பட்டது.

சில்லரை இனங்களில் உள்ள அதிகமானது சாங்கிஷன் செய்யப்பட்டது.

29. 2—6—09-ல் D. B. R. நெ. 15-ல் ரூ 160-க்கு நீடாமங்கலம் சப் அசிஸ்டெண்டு சர்ஜியன் ஜாகையின் பின் புறத்தில் ஒரு கிணறு வெட்ட சாங்கிஷன் ஆன வேலைக்கு ஒரு முடிவு ரிபோர்ட்டு அனுப்பி சாங்கிஷனைக்கோரி 9-7-20 ச. டி. கலெக்டருடைய R. C. 572 Eng of 20 ஆபீஸ் குறிப்பு.

குறிப்பு:—அதிகமில்லை.

தீர்மானம்:— ரிகார்டு செய்யப்பட்டது

30. 14-0-18-ல் D. B. R. 11 (3)ல் ரூ 550-க்கு குரிச்சி குளத்தின் 9-வது நம்பர் மதகை திரும்பக்கட்ட சாங்கிஷன் ஆன வேலைக்கு முடிவு ரிபோர்ட்டு அனுப்பி சாங்கிஷனைக்கோரிய 11-7-2 உயுள்ள ச. டி, கலெக்டருடைய R. C. 546 E. of 20 ஆபீஸ் குறிப்பு.

குறிப்பு:—திட்டத் தொகைக்கு அதிக மில்லை கடைசியில் பணம் கொடுக்கும்போது சில்லரை இனங்களில் அதிகத்தை தள்ளுபடி செய்யப்பட்டது.

தீர்மானம்:—ரிகார்டு செய்யப்பட்டது.

31. பண்டாரவாடைக்கும் அய்யம்பேட்டைக்கு மிடையேயுள்ள 5 ம் நம்பர் ரோடுக்குக் கப்பிக்கல் போட ரூ 21000 யும் தனுஷ்கோடி சத்திரத்தைப் பழுது பார்க்க ரூ 250 யும் சாங்கிஷன் செய்மப்பட்டது.

IX. சாங்கிஷனான திட்டத்திற்குமேல் அதிகம்.

32. திருத்துறைப்பூண்டியிலிருந்து திருக்கார வாசல் போகும் 35 நெ. ரோட்டில் 7/6-வது மைலில் 57 நெ. வாய்க்கால் பாலம் கட்ட 23-3-20 தேதியுள்ள 33 நெ. தீர்மானத்தில் சாங்கிஷன் செய்த திட்டத்திற்கு மேல் 100-க்கு 20 டெண்டர் ஜாஸ்தியை ஒப்புக்கொள்ளவும் ஷை திட்டத்தின் ஜாஸ்தி தொகை ரூ 150 பாலங்கள் கட்ட வேண்டியதற்காக இருக்கிற ஐவேஜியிலிருந்து எடுத்துக்கொள்ளலாமென்று எழுதுகிற 17-4-20 உயுள்ள D. B. இஞ்சினீர் 172 நெ. கடிதம் படிக்கப்பட்டது.

தீர்மானம்:— உத்திரவு செய்யப்பட்டது.

33. தஞ்சாவூரிலிருந்து வல்லம் போகும் 1. நெ. மேல ரோட்டில் டிபார்ட்டு மெண்டாரால் கப்பி பரப்புவதற்க்காக்கூலிகள் வேலை செய்ததற்கு பின் வருமான ரேட்டு கொடுத்ததாக சாங்கிஷனைக்கோரிய 17-6-20 தேதியுள்ள D. B. இஞ்சினீருடைய நெ. 2840 L. W. கடிதம் படிக்கப்பட்டது.

		இப்போதிய ரேட்.
	ரூ. அ. பை.	ரூ. அ. பை
கூலி தலைவன்	0—10—0	0—8—0
மனிதன்	0— 8—0	0—6—0
ஸ்திரி	0— 5—0	0—4—0
பையன்	0— 6—0	0—4—0

தீர்:—சாங்கிஷன் செய்யப்பட்டது.

34. ஒரத்தநாடு சத்திரம் ஸெகெண்டரி ஸ்கூலின் நோயால் வருந்தும் போர்டர்களுக்கு படுக்கையும் உடுப்பும் சப்ளை செய்ய ரூ 100 அல்லாட்டு

செய்ய சாங்கிஷனைக் கோருகிற ச. டி. கலெக்டருடைய 6—7—20 தேதியுள்ள R. C. 908 Eng of 19 ஆபீஸ் குறிப்பு.

தீர்:—எதிர் பாராத செலவுகளுக்காக உள்ள ஐவேஜியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

35. ஆருபாதி பள்ளிக்கூடம் கட்டடத்திற்கு பழுது பார்க்க ரூ 960-க்கு மாறுதல் திட்டத்தின் தொகைக்காக ரூ 460-க்கு அலாட்மெண்டில் மாறுதல் சாங்கிஷன் செய்து உத்திரவைக்கோரிய 28-4-20 தேதியுள்ள மாயவரம் தாலூகாபோர்டு பிரசிடெண்டின் கடிதம் R. C. நெ. 441 T. B படிக்கப்பட்டது.

தீர்:—சாங்கிஷன் செய்யப்பட்டது.

35. 1920-21-ம் வருஷத்திற்கு அடியில் கண்ட சத்திரம் வைத்தியசாலைகளுக்கு சியுனையும் மருந்துகளும் வாங்க இண்டெண்டுகள்.

		ரூ.	அ.	பை.
1.	திருவாதி வைத்தியசாலை	480	6	0
2.	திருக்காட்டுப்பள்ளி ஷை	401	1	6
3.	ஐயம்பேட்டை ஷை	341	4	7
4.	மீம்மிசல் ஷை	167	10	2
5.	நீடாமங்கல ஆஸ்பத்திரி	377	3	0
6.	ஒரத்தநாடு ஆஸ்பத்திரி	318	0	0
7.	மணமேல்குடி டிஸ்பென்ஸரி	417	6	9

தீர்:—நம்பர் 1-விருந்து 6 வரைக்கும் அந்தந்த வைத்தியசாலைகளின் பட்ஜட் ஐவேஜியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது. நம்பர் 7-யை மீம்மிசல் டிஸ்பென்ஸரியில் அலாட்மெண்டின் மிகுதியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

XIII. ரயில்வே.

37. முதல். இரண்டாவது, மூன்றாவது வகுப்பு வண்டிகள் திருவாரூரிலிருந்தும் பிறகு அவ்வூருக்குத் திரும்பியும் பட்டணம் வரையிலும் போகவேண்டிய ஆலோசனையை பரீக்ஷார்த்தமாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிற ரயில்வே ஏஜன்டின் 29-6-20உயுள்ள நெ. 1391-266 கடிதம் படிக்கப்பட்டது.

தீர்:-ரிகார்டு செய்யப்பட்டது.

38. எரிச்சி குவாரியில் பாலஸ்டு வண்டிகள் சயிடிங்குக்கு போகும் தூரம் ரொம்பவும் நீளமாய் இருப்பதால் ஒரு டிப் சயிடிங்கும் வேலை சீக்கிரம் நடக்க 6 டிப் வாகன்கள் சேர்ந்த ஒரு டிராம்வே போடவும் ரூ 111-க்கு ஒரு எஸ்டிமேட்டை அனுப்பி சாங்கிஷனைக்கோரிய ரயில்வே ஏஜண்டினுடைய 1920-ஞு ஜனவரி மீ 6உயுள்ள 1106 66/26 நெ, லெட்டர் படிக்கப்பட்டது.

தீர்:—ரயில்வே காரண்டி பண்டின் குளோஸிங் பாலன்ஸிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது

XIV. தற்கால சிப்பந்திகளின் மாறுதல்.

39. ராஜா மராட்டா எலிமெண்டரி ஸ்கூலுக்கு ரூ 15-ல் இன்னும் ஒரு உபாத்தியாயரை நியமனம் செய்து கொள்ள சாங்கிஷனைக் கோருகிற ச. டி. கலெக்டர் அவர்களுடைய 12-6-20 தேதியுள்ள R. C. 982 G1 of 20 ஆபீஸ் குறிப்பு

அங்கீகாரத்தை முன்னிட்டு சாங்கிஷன் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

40. லோகல் போர்டு ரூல் 55-வது விதிப்படி மாதம் ஒன்றுக்கு லோகல் படி உள்பட ரூ30 சம்பளத்தில் ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்களிடத்தில் வேலை செய்வதற்காக 6 மாத காலத்திற்கு ஒரு நியாம்பு குமாஸ்தாவை ஏற்படுத்திய ஜில்லா போர்டு பிரஸிடெண்டின் 28—6—20 உயுள்ள R. C. 1894 T. B. of 20 உத்திரவு படிக்கப்பட்டது.

தீர்மானம்:—ரிகார்டு செய்யப்பட்டது.

40. ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்கள் ஆபீஸில் 17--6--20 முதல் 6 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூ 12 வீதம் லோகல் போர்டு 55 பிரிவுப்படி 4 ஜாஸ்தி பியூன்களை ஏற்படுத்திய 18--6--20 தேதியுள்ள R. C. 1722 உத்திரவு படிக்கப்பட்டது.

தீர்மானம்:—ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாபதாசம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

சென்ற வருஷத்திய ரிபோர்ட் அங்கீகரிக்கப் பட்டது.

தஞ்சை ஜில்லா 2-வது மகா நாட்டின் அக்கிராசனர் தமது பிரசங்கத்தைப் படித்து முடித்த பிறகு, பாபநாசம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின்காரியதரிசியவர்கள் தமது சங்கத்தின் சென்ற வருஷ ரிபோர்ட்டைச் சபையோர்களுக்கு வாசித்துக் காட்டி உருக்கமாகப் பேசினர். ரிபோர்ட் வருமாறு:—

பாபநாசம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம 1919 ஞு ஆகஸ்டு மீ 3உ ஸ்தாபிக்கப்பட்டது. கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளை ஸர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டும் ஒற்றுமை சிநேகம் கிராம உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றம் முதலியவைகளைச் சீர் படுத்த உத்தேசித்தும் இது ஏற்படுத்தப்பட்டது, நாளடைவில் வளர்பிறை சந்திரன் போல் வளர்ந்து வருகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின்மேன்மையான குணத்தை யுணர்ந்து அநேகமாய் எல்லாக் கிராம உத்தியோகஸ்தர்களும் மிகவும் சிரத்தையுடன் அபிமானித்தார்கள். 3-8-20 யோடு முடிவாகிற வருஷத்தில் மொத்தம் 14 மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. சராசரி ஒருமீட்டிங்குக்கு 35 கிராம உத்தியோகஸ்தர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். கிராமஉத்தியோகஸ்தர்களின் நிலைமையை அறிந்து பல தேசாபிமானிகள் தங்களால் இயன்ற அளவு உதவி புரிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இச்சங்கம் மனப் பூர்வமாய் நன்றி பாராட்டுகிறது. இனியும் அபிமானிகள் இச்சங்கத்தின் அபிருத்தியை அவர்கள் கொள்கைகளில் ஒன்றாய்க் கொண்டு மேன்மை படுத்துவார்கள் என்று வேண்டப் படுகிறார்கள்

இச்சங்கம் ஏற்பட்டுக் கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளை மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி எடுத்து சொல்லியதன் காரணத்தினால் தான். மலையைக் கெல்லி எலி பிடித்தாற்போல கர்ணங்களுக்கும் கிராம சிப்பந்திகளுக்கும் சம்பள உயர்வு செய்த பாவனையாய் கவர்ன்மெண்டார் கண்ணைத் துடைத்திருக்கிறார்கள்.

தக்க சமயங்களில் இச்சங்கத்தார் 11& 23-2-20; 7-3-20 தேதிகளில் அடிக்கடி கவர்ன்மெண்டாருக்குக் கிராம உத்தியோகஸ்தர்களின் அப்போதைக் கப்போதுள்ள சரியான உணர்ச்சியையும் நிலைமையையும் தந்தி மூலமாய்த் தெரியப்படுத்தி வந்திருக்கிறார்கள். இவ்விஷயங்களை எல்லாக் கிராமஉத்தியோகஸ்தர்களும் ஒரே மனதாய் ஆமோதித்துஒற்றுமை காட்டியது மெச்சத்தக்கது

சென்னையிலிருந்து கனம் C. G. டாட்ஹண்டர் துரையவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளைக் கேட்பதற்குத்து அனுப்பும்படி ஷை யார் அவர்கள் தந்தி மூலமாயும் கடிதங்கள் மூலமாயும் ராஜதானி முழுமையும் எல்லாச் சங்கங்களுக்கும் தெரிவித்தும் டெபுடேஷன் ஆகபோனதும் இச்சங்கத்தினுடைய இடைவிடா ஊக்கத்தின் பலன் என்றே நான் சொல்லத் துணிகிறேன்.

கிராம முன்சீபு சம்பளம் இன்னும் கர்ணங்களின் சம்பள உயர்வு விஷயம் ரயத்துவாரி காணங்களின் கஷ்டங்கள் முதலியவைகளைப் பற்றி நான் தெரியப்படுத்தக் கூடிய விஷயங்கள் பல விருந்தும் எனக்கு அளிக்கப் பட்டிருக்கும் சொற்ப நிமிஷங்களுக்குள் அவைகளை எடுத்துரைக்கச் சக்திபற்றவனாய் இருக்கிறேன். இச்சங்கம் மேன் மேலும் அபிவிருத்தி யாகும் பொருட்டும் நான் ஈஸ்வரனைப் பிரார்த்திக்கிறேன்.

எனக்கு எப்பொழுதும் உதவி புரிந்து வந்து, நான் சில சமயங்களில் காரியதரிசி முறையில் செய்தவைகளை இச்சங்கத்தார் ஒரு மனதாய் சரி என்று ஒப்புக்கொண்டு என்னைக் கௌரவப் படுத்தியதற்கு நான் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டவனாய் இருக்கிறேன்.

இச்சங்கத்திற்கு பிரஸிடெண்டாக அமைந்திருக்கும் நமது ஹுசேன் பாஷா சாகேப் அவர்கள் ஷை யாருக்குள்ள அநேக சொந்த அலுவல்களைச் சற்றேனும் கவனியாமல் சங்கத்திற்கு கிரம்பவும் பாடு பட்டு உழைத்து வருகிறார் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கது.

இச்சங்க விஷயமாய் இடைவிடாப்பாடு பட்டுக் கொண்டு உதவி புரிந்துவரும் கனம் கான் பகதூர் அகமத் தம்பி மரக்காயர் அவர்களுக்கு இச்சங்கத்தார் எப்பொழுதும் நன்றிப் பாராட்டுகிறார்கள்.

மேலும் பற்பல பத்திரிகைகளும்ஸ்பெஷலாய் சுதேச மித்திரன், இந்து நேசன், தேசபக்தன், தஞ்சையில் பிரசுரமாகி வரும் சமரச போதினி பத்திரிகைகள் இச்சங்கத்திற்குப் புரிந்திருக்கும் உதவிக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இச்சங்கத்தின் அபிவிருத்தியை முன்னிட்டுச் சங்கத்திற்கு நன் கொடையாகக் அபிமானிகளுக்கு நான் வந்தனமளிக்கிறேன்.

சங்கத்தின் வரவு	ரூ
மெம்பர்களிடமிருந்து	138
நன் கொடை	88
மொத்தம்	226

போஸ்டேஜ், டெபுடேஷன், ஸ்டேஷனரி செலவு ரூ 138-11-0. பாக்கி கையிருப்பு ரூ 87-5-0

பீ. எஸ். இராமச்சந்திர ஐயர்.

காரியதரிசி.

தஞ்சைஜில்லா கி. உ. 2-வது மாகாநாடு

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அதிகரித்துவிட்டதென்றார்கள். ஆனால் கிராம உத்தியோகஸ்தர்களது சம்பளத்தைப்பற்றி யோஜிக்கையில் அந்தப் பெருமானத்தைப்பற்றி முழுமையும் மறந்துவிட்டனர். மறு முறை இவ்விஷயம் கிளப்பப்பட்டபோது இந்தியரான சிப்பந்திகளைப்பற்றி யோசிக்கையில் அதிகார வர்க்கத்தினருக்குள்ள வழக்கம் போல் அகாரணமாக நீண்டகாலத் தாமதம் குறுக்கிட்டது. 1900 ம் வருஷத்திலேதான் புது முறை நிறைவேறிற்று. அதாவது ரூபாய் 5, 6, 7, 8, 10, என்ற சம்பளங்கள் அப்போது குறிக்கப்பட்ட விலை வாசிப்படி அதாவது கலம் ஒன்றுக்கு ரூ 1-1-0 வீதம் எற்பட்டதென வைத்துக்கொண்ட போதிலும் தற்காலம் இருப்பதற்குத் தக்கபடி ஏற்பாடு செய்வதனால் 1900 ம் வருஷம் இருந்ததைப் போல மூன்று மடங்காவது இருக்கவேண்டும். செய்யும் வேலைக்குப் பிரதிப் பிரயோஜனம் கொடுப்பதென்றால், கிராம முன்ஸிப்களின் சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற நியாயத்திற்கு ஆட்சேபனைகளிருக்கமுடியாது. அவர்களது வேலையின் தன்மையைப்பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்; சம்பளக் கமிட்டியார் சொல்லுகிறபடி பெரியதனக்காரரது சம்பளம் மேன் செலவுகளுக்காக மாத்திரம் கொடுக்கப்படும் கௌரவத் தொகையென வைத்துக்கொண்டாலும் அந்தச் செலவு கூட மூன்று மடங்கேறியிருப்பதுடன், பெரிய தனக்காரரது கடமைகளும் விருத்தியாகி அவர்கள் உதவி செய்ய கடமைப்பட்ட உத்தியோகஸ்தர்களும் எராளமாகி விட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்விஷயமாக கவர்ன்மெண்டாரைத் தொல்லை செய்யும்போதெல்லாம் அவர்கள் மூலைக்கு மூலை போய்க்கொண்டு இந்த நியாயமான கேள்விக்குச் சமாதானங்கள் தேடி வருகிறார்கள். தம்மால் மறுக்கமுடியாத விஷயத்திலும் இப்படி அவர்கள் பிடிவாத குணம் காட்டுவது தான் ஆச்சர்யத்தைத் தருகிறது.

கர்ணன்களைப்பற்றிப் பிறகு பேசுகிறேன். இப்போது கிராம முனிசீப்களுக்கும் பெரிய தனக்காரருக்கும் தக்க வெகுமானம் கொடுக்க வேண்டுமென்ற கேள்விக்கு இடைவிடாமல் கூறி வருகிற தகாத சமாதானத்தைப்பற்றி இப்போது ஆராய்கிறேன். 1909 ம் வருஷம் உணவுப் பொருள் விலை யேற்றத்தினால் அதிக பணம் கிராமஉத்தியோகஸ்தர்களுக்குக்கொடுக்க மறுத்ததற்குக் காரணமாக செலவு எறிவிடுகிறதென்றும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தைத் தவிர வேறு வருமானங்களுமுண்டு என்றும் கூறினார்கள். 1909-ல் கிராமப் பெரியதனக்காருக்கு மறுபடியும் சம்பள எற்றத்தை மறுக்கும்போது, இவர்களது சம்பளம் கௌரவத்திற்குக் கொடுக்கப்படுகிறதே யன்றி, ஜீவனத்திற்காக என்று கருதக் கூடாதென்றார்கள். கிராம உத்தியோகஸ்தர்களை அடிக்கடி கச்சேரிகளுக்கு சம்மன் செய்து வரவழைக்கும் வழக்கமிருந்து வந்தும் அதற்காக அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று விடாமல் சட்ட சபைகளில் கேள்விகள் கேட்டுக்கொண்டு வந்தும் கவர்ன்மெண்டார் கூறிய விநோத காரணம் பின்வருமாறு. அந்த அலவுன்ஸ் இன்றியே வேலை பார்க்க அப்ளிகேஷன்கள் முறைவின்றிக் கிடைக்கின்றன என்றார்கள்; ஆனால் அவர்களது ஆட்சி முறையைப் பற்றிய ரிபோர்ட்டுகளிலேயே அலுத்துப் போகுமாறு திரும்பத் திரும்ப கிராம முனிஸீப்களுக்கும் பெரியதனக்காரப் பதவிக்கும் தக்க மனிதர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று கூறப்பட்டிருப்பதை மறந்தே போய்விடுகிறார்கள். கவர்ன்மெண்டாருக்கு வேலைக்காக மனுக்கள் வருகின்றன என்பது உண்மை தான் நல்லதும் கெட்டதுமாக மனுக்கள் வந்துவிடுகின்றன. ஆனால் கவர்ன்மெண்டார் கொடுக்கும் சிறு தொகையினாலும் இதர சம்பாத்தியம் அவர்களுக்கு இருக்கிறதென்று சொல்லுவதாலும் கிராம உத்தியோகஸ்தர்களது பலத்தையாவது திறமையையாவது உயர்த்திவிடவில்லை. மற்றும் பல சமயங்களில் கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்தினால் செலவு ஏராளமாகிவிடும் என்றும் இந்த மாகாணத்தில் மற்ற மாகாணங்களைவிட நிலத்தீர்வையை வசூல் செய்யும் செலவைக் குறைப்பதே கவர்ன்மெண்டாரது நோக்கமாக இருக்கவேண்டுமெனவும் ஒளிக்காமல் கூறியிருக்கிறார்கள். அப்போதும் கூட கவர்ன்மெண்டார் ஒரு விஷயத்தை மறந்து விட்டிருக்கிறார்கள். நமது மாகாணத்தில் வேறெந்த மாகாணத்தையும் விட அதிகமாக எளிய ரயத்துக்களிடமிருந்து ஏராளமாக கிரகிக்கப்படுகிறதென்பதையும், மற்ற மாகாணங்களும் மத்திய கவர்ன்மெண்டாரும் நமது பணத்தைக்கொண்டே அதிகச் செலவுகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிட்டனர். கிராம உத்தியோகஸ்தர்கள் முழு நேரமும் வேலை செய்கின்ற ராஜாங்க உத்தியோகஸ்தரல்லரென்றும் பல தடவைகளில் கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள். அப்படி முழு நேர வேலை செய்யும் வேலைக்காரரல்லரென்ற இந்த பொய்க்கதையைத் தீர்மானம் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலையையும் செலவிடும் நேரத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், கவர்மெண்டாரிடம் வேலை பார்க்கும் மற்ற முழு நேர வேலை செய்யும் உத்தியோகஸ்தரைக் காட்டிலும் இவர்களே பூர்ண வேலை செய்கின்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் என மதிக்க வேண்டியிருக்கும். பகலில் சில மணி நேரம் மாத்திரமோ வேலை செய்து விட்டு முழுச் சம்பளமும் படியும் இதர அலவன்சுகளும் வாங்கும் உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் இவர்களே அதிக நேரம் வேலை செய்கிறவராவார். அடங்கியும் கட்டுப்பட்டும் நடப்பது முக்கிய லட்சணமானால், மற்ற கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும் அதிகமாக கிராம உத்தியோகஸ்தர்களிடமே வணக்கமும் படிமானமும் எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்தலத்தைவிட்டு வெளியே செல்வதிலும் அதிகத் தடை ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் நடந்துகொள்ள வேண்டிய விதிகளுக்கு இவர்கள் கட்டுப்பட்டவர்களல்லர்என்பது உண்மைதான். ஆனால் ஸ்டாண்டிங் ஆர்டர்கள் என்ற விதிகளின்படி அதிகடுமையான ரஜா முதலிய விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். மேலுத்தியோகஸ்தர்களது அதிருப்திக்கும் இவர்கள் அடிக்கடி பாத்திரர்களாகிவிடுகின்றார்கள். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் நிர்பந்தங்கள் அடையாளமானால், கிராம முனிசிப்களுக்கும் நிர்பந்தங்களெல்லாம் உண்டு. ஆனால் உத்தியோகஸ்தருக்குப்பொதுவாகவும் தனியாகவுமுள்ள சுதந்திரங்கள் எதுவும் இவர்களுக்கில்லை. ஓட் சுதந்திரத்தைப் பற்றிய வரையில் இவர்கள் உத்தியோகஸ்தரென மதிக்கப்படுகிறார். லோகல்போர்டு திருத்த மசோதாவின்படி அபேட்சகர்களாக நிற்க அவர்களுக்கு உரிமையில்லாமற் போய்விடக் கூடும்.

(இன்னும் வரும்)

இனாம்! இனாம்!! இனாம்!!!

ஸமரஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திமே

(செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)

இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுண்டன்பேனாவையொத்த ஒருபுதுமாதிரி "வெல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேனா இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்நிப்புடனும், மிகஅழகாயும் ஷை பேனாவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷை பேனாவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றே செய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனாக்கள்பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக் கொள்ளவும்.

"வெல்லஸ்லி" பேனாக்களில் பல மாதிரிகள்.

வெல்வஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனாவை போலவேயிருக்கும் விலை ... ... ரூ. 4 8.

ஷை ,, 12 ... ... ,, 5 0.

ஷை ,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனாவிற்கு இங்கிபோட வேண்டுமென்றால் ஷை பேனாவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனாவின்மேலுள்ள ஸ்பிரிங்கை தூக்கினால் பேனாவானது இங்கியை தானாகவே உட்கொள்ளும். ,, 5 8.

எமது விலாசம்:— "ஸமரஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனாம்.

ஸ்டேஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

நேர்த்தியான பிரின்டிங்

ஜி. எஸ். மணி டா. அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்ருகவும் கிறமையாகவும் நடத்திவருகிருர். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப் டும்,முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிருர்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

தயாராய் விட்டது.

ஊருகாய் தினுசுகளும் சட்டினிகளும் கைதேர்ந்த பிராமணர்களைக்கொண்டு செய்விக்கப் பட்டன.

கடுகுமாங்காய் 1 சேர் டின் விலை ரூ.	1	0	0
எலுமிச்சம்பழம் ,,	1	0	0
இஞ்சி ஊருகாய் ,,	0	10	0
கடாரங்காய் ,,	1	0	0
மாவடாம் 100-க்கு ,,	1	4	0
அசல் பாதம் அல்வா ,,	2	0	0
அப்பளம் 100-க்கு ,,	1	0	0
ரசம்பவுடர் $\frac{1}{4}$ படி டின்	1	0	0
சாம்பார்பவுடர் $\frac{1}{4}$ படி டின்	1	0	0
பருப்புப்பொடி $\frac{1}{4}$ படி டின்	1	0	0

3 ரூபாய்க்கு ஆர்டர் செய்கிறவர்கள் ஒரு ரூபா முன்பணம் அட்வான்ஸாக அனுப்பவும். பினங்கு சிங்கப்பூருக்கு ஏஜண்டுகள் தேவை.

THE INDIAN PICKLES CONDIMENT MANUFACTURING Co., Madras.

T. B. Jayasunker Davey
இயற்றிய

ரத்னப்பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனுல் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.

விலை அணு **8.**

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

கனகாம்புஜம் 2-8-0.

	ரூ.	அ.		ரூ.	அ.
அம்புஜாக்ஷி	1	12	நாகரிகம்	2	0
விஜயசுந்தரம்	2	0	ஆனந்தமடம்	1	0
அஞ்சனாக்ஷி	2	4	தர்மாம்பாள்	1	2
பாலாமணி	2	0	வஜ்ரலேகை	0	12
அயாஷா	1	12	விஜயபாஸ்கரன்	1	0
ஞானாம்பிகை	1	8	ஜெயலக்ஷ்மி	0	10
மேனகா	1	8	மாயாசுந்தரி	0	8
வஸந்தமல்லிகா	1	0	லீதாலக்ஷ்மி	1	0
கோகிலாம்பாள்	0	12	சிவஞானம்	1	4
மங்கையர்க்கரசி	0	12			

எங்களிடம் எல்லாத் தமிழ் நாவல்களும், இன்னும் மற்ற புஸ்தகங்களும் கிடைக்கும். கியாட்லாகுக்கு எழுதுங்கள்.

சாரி அண்டு கம்பெனி,
தபாற் பெட்டி நெ. 281, மதராஸ்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், சுர்தற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.

,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனுல்தான்

சகலதேச வாஸிகளும், ஸ்திரீகளும, புருஷர்களும் என்னை விரும்புகிருர்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! நாணயமான சரக்குகள்!!

திருப்திபில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலைபானத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் செய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும் 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுககும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனும்!

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. ர. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையை ஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்.

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளைக்காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

மஹத்வமுள்ள மஹானல் கிடைத்த

"அருமையான மூலிகையும் தாயத்தும்"

குஷ்டம், க்ஷயம், மூலம், கிருணி, பிரம்மை, பைத்தியம், இழுப்பு, வலிபபு, மூத்திர வியாதி முதல் நாள்பட்ட எந்த விதமான வியாதிகளும் பலவித கவலைகளும் கஷ்டங்களும உடனே நீங்கும். புத்திரபாக்கியம் உண்டாகும். வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து அனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபரமும் கிடைக்கும். எந்த தேசத்து (ஸ்டாம்பும்) அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.